ബാലമിത്രം
വാല്യം 1 ലക്കം 2
ജനുവരി 1930.

JL
൬൨11, N30BV
N30·1·2.
188768

Regd. No. M. 2573.

# பால வித்யா,

(மாதப் பத்திரிகை)

THE ... 27 MAR ...

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பஃது அறிவு "


| தொகுதி I | 1930௵ பிப்ரவரி௴<br>சுக்ல௵ மாசி௴ | பகுதி II. |
|---|---|---|




## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| சபேசன் (தொடர்ச்சி) | 41—80 |
| அசோகா அல்லது அறியாமையால் நேர்ந்த பிழைக்காக ஆருயிரிழந்த அருங்குமரி — ஓர் இனிய கதை | 1—10 |

# விஞ்ஞாபனம்.

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முதற் பகுதியின் முதல் தொகுதி நுந்தம் பார்வைக்கு அனுப்பப் பட்டிருக்கிறதன்றோ? அதனை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படித்துப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அதனையும் இவ்விரண்டாந்தொகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேரவும், தம் நண்பர் முதலாயினோர்க்கு எடுத்துச் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

> "ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
> நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
> இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
> இன்னே செய்யவும் வேண்டும்."

(கபிலர்)

பதிப்பாளர்கள்.

188768

27 MAR 1930

நிற்க, நாம் சொன்னவிதம், சபேசன் நல்ல சமயத்தில் அங்குத்தோன்றி, அப் பெண்மணியைக் காப்பாற்றியதெப்படி யென்பதை நம் நேயர்களறிய ஆசைப்படக்கூடுமாகையால், அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவோம்.

சபேசன், கோயிலுக்குப் போய்விட்டு வருவதாக, தன் தங்கை ராஜத்தினிடம் விடைபெற்றுக்கொண்டு போனது நம் நேயர்களறிந்த விஷயமே. கடைசியில், 'அவன் ஸ்வாமி தர்சனம் செய்துவிட்டு, வெளியே வந்தபொழுது, அப் பெண்மணி, தன் வீட்டு வேலைக்காரனாகிய வீராசாமியுடன், பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான். அச்சமயம், அவளுடைய முகத்தில் காணப்பட்ட கவலையையும் கலவரத்தையும் கண்டு, அதற்குக் காரணம் என்னவோவென் ஆச்சர்யப்பட்டு, கொஞ்சநேரம், அவளைக் கவனித்தவண்ணம் நின்றான். பிறகு, அவள், வீராசாமியுடன், அவ்விடத்தைவிட்டுப்போகவே, அவனுடைய பார்வை தற்செயலாய், எதிரிலிருந்த, ஒரு தேரின் மறைவில் நின்றுகொண்டிருந்த, இரண்டு முரட்டு மனிதர்களின்மேல் விழ, அவர்களையுற்று நோக்கினான். உடனே அவனுடைய மனதில் ஒருவித சந்தேகம் தோன்றியது. இன்னும், அவ்விருவரும் சற்று நேரத்திற்கெல்லாம், அவ்விடத்தைவிட்டு முன் சென்று, கொஞ்சதூரத்தில் போய்க்கொண்டிருந்த ஒரு வண்டியைப் பின்பற்றி நடக்கவே, "ஓஹோ! அவ்வண்டியில்தான் அப் பெண்ணுமிருக்கிறாள். இதில் ஏதோ விசேஷமிருக்கிறது!" என்று நினைத்தான். ஆனால், உடனே, "இப்பொழும் ஊரில் நடக்கும் அக்கிரமங்களையெல்லாம் கவனிக்க, நமக்கு நேரமில்லை!" என்று எண்ணியவன்போல், அவ்விடத்தை விட்டுத் துரிதமாய் நடந்தான். பிறகு, சற்று நேரத்திற்கெல்லாம், அவன், சமீபத்திலிருந்த சில வளைக்கடைகளின் சமீபம் வந்தபொழுது, அங்கு அப்பெண்மணியின் பாட்டி நின்றுகொண்டு, எதிரில் வருபவர்களையெல்லாம், தன் பேத்தியின் அங்க அடையாளங்களை வர்ணித்து, அவர்களில் யாராவது, அவளைக்கண்டதுண்டோ வென்று கவலையுடன் விசாரித்துக்கொண்டிருப்பதைக்கண்டு, வியப்புற்று,

தனக்குத் தெரிந்ததை அம்மாளிடம் சொல்லுந்தருவாயிலிருந்தான். அச்சமயம், யாரோ தன் தோளைத்தொடுவது போலிருக்க, அவன் திரும்பியபொழுது, தன் பக்கத்தில் சுமார் ஐம்பது வயதுள்ள, ஒரு கிழவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அப்பிராமணர், அவனை ஜாடைகாட்டிக் கொஞ்சதூரம் அழைத்துச்சென்று, தாழ்ந்த குரலில்,

“அப்பா! உன் முகத்தைப்பார்க்கும்பொழுது, நீ அப்பெண்ணைப் பார்த்திருக்கிறாய் என்று தோன்றுகிறது. ஏதேனும் விசேஷமுண்டோ?” என்று வினவ, சபேசன், ஆச்சர்யமும் சந்தேகமும் அதிகரிக்க, தனக்குத் தெரிந்ததைச் சீக்கிரம் சொல்லிமுடித்தான். அதைக்கேட்ட அக்கிழவர் திடுக்கிட்டார். பிறகு, கவலையுடன்,

“அப்படியானால், அவள் ஒரு பெரும் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறாள். அப்பா! நீ திடசாலியாகவும், புத்திசாலியாகவும் காணப்படுவதால், நீ பிரயத்தனப்படும்பக்ஷத்தில், அவளைக் காப்பாற்றக்கூடும்!” என்றார்.

சபேசன், சற்றும் தயங்காமல், “ஐயா! நான் தயார். இதைப்பற்றி உமக்குத் தெரிந்ததை உடனே சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமாம், நாம் நமக்குத் தெரிந்ததை அதோ அவள் பொருட்டுக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் அப்பாட்டிக்குத் தெரிவிக்கவேண்டாமோ?” என்று கேட்க, அக்கிழவர்,

“அப்பா! இதை அவள் அறியாமலிருப்பதே நலம். வா! வா! நாம் சற்றும் காலதாமதம் செய்யக்கூடாது. புதுச்சாலைத்தெருவுக்குப் போக உடனே ஒரு வண்டி பார். போய்க்கொண்டே பேசுவோம்.” என்று சொல்லவே, இருவரும், அவ்விடத்தைவிட்டு அவசரத்துடன் சென்றார்கள். ஆனால் அவர்கள் பதினைந்து நிமிஷநேரம் வரையில் தேடியும் வண்டி ஒன்றும் அகப்படவில்லை. பிறகு நடந்து செல்லத்தீர்மானித்து, தங்களால் முடிந்த வரையில் வேகமாய் நடக்க ஆரம்பித்தார்கள். கடைசியில், அவர்கள் நகர



மண்டபத்தைத் தாண்டியதும், சபேசன் அவசரம் தாங்காமல்,

“ஸ்வாமி! இனி விஷயத்தைச் சொல்லும்!” என்று கேட்க, கிழவர்,

“அப்பா! மறந்தே விட்டேன். முதலில், நீ எனக்கு ஒரு வாக்குக் கொடுக்கவேண்டும். அதாவது இதில் நான் வேலை செய்தேனென்பது வெளிவரக்கூடாது. ஏனென்றால் தற்சமயம், இப் பெண்ணைக் கெடுக்கத் தீர்மானித்திருப்பவர் வீட்டில் நான் பரிசாரகன். இன்னும், என் யஜமானருடைய பெருந் தன்மையையும், சுத்த நடவடிக்கைகளையும் நான் நன்கறிந்தவனாகையால், இக்கார்யத்தைச்செய்ய அவர் நிச்சயித்ததைக்காண எனக்கே மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. இதுவரையில், நான் அவரிடமிருந்து அடைந்திருக்கும் உதவிகளையும் நன்மைகளையும் நினைக்க, இவ்விதம், அவருடைய கார்யத்தில் குறுக்கே பிரவேசிக்க எனக்கிஷ்டமில்லை. ஆனபோதிலும், ஒரு பேதைப் பெண் கெடுக்கப்படுவாளென்பதை அறிந்தபிறகு, சும்மா இருக்க என் மனம் இடந்தரவில்லை. எனவே, இவ்விஷயத்தில் நான் உனக்குச் சாதகமாயிருந்தேனென்பதை நீ வெளியிடாமலிருப்பது மன்றி, என் யஜமானர், நாம் அங்குப்போகுமுன், அப்பெண்ணைக் கெடுத்திருந்தாலொழிய, அவருக்கு யாதொரு தீங்கு மிழைப்பதில்லையெனவும் எனக்குச் சத்தியம் செய்துகொடுக்கவேண்டும்” என்றார்.

சபேசன் சற்றும் தயங்காமல்,

“ஸ்வாமி! உங்களுடைய நிபந்தனைகளுக்கு நான் கட்டுப்படுகிறேன். இனி, விஷயத்தைச் சொல்லும்!” என்றான். கிழவர், பக்கங்களைப் பார்த்துக்கொண்டு, தாழ்ந்த குரலில்,

“அப்பா! சென்ற இரண்டு நாட்களாக, என் வீட்டில் இதைப்பற்றி நடந்த பேச்சையும், இதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும், நான் ரஹஸ்யமாய் அறிந்துவந்தேன். என் யஜமானர், இதில் தமக்கு உதவிபுரியும்படி இரண்டு அயோ

க்கிய சிகாமணிகளைக் கேட்டுக் கொண்டதில், அப்பாவிகள், இப்பெண்ணை எப்படியாகிலும், அபஹரித்துக் கொண்டு வந்து, புதுச்சாலையில், சென்ற இரண்டுவருஷகாலமாய், குடியில்லாததும், இன்னும் பக்கத்தில் வேறு வீடுகளில்லாததுமான ஒரு பங்களாவிலே அடைத்து விடுவதாக வாக்களித்தார்கள். இன்னும் அவர்கள் குறிப்பிட்டது இன்று இரவு 11 மணிக்கென்பதையும், அப் பெண்மணி யாரென்பதையும் நான் அறிந்துகொள்ளவே, எப்படியாவது, அவளைக் காப்பாற்றுவதென நிச்சயித்தேன். நான் சுமார் இரண்டு மணி சாவகாசத்திற்கு முன்பு, அப் பெண்மணியின் வீட்டிற்கு இதேகாரியமாகப் போனபொழுது, அவள் தன் பாட்டியுடன் நித்தியபுரீசுவரஸ்வாமி கோயிலுக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட, அங்கும் சென்று நான் பல இடங்களில் தேடியும் ஒன்றும் பிரயோஜனமில்லாமற் போய்விட்டது. கடைசியில், இனி நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லையென நினைத்து திரும்பும் சமயம், அவளுடைய பாட்டி சாலையிலே புலம்பிக்கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன். அவள், தன் பேத்தியை வர்ணித்ததிலிருந்து, நான் காப்பாற்றப் பிரயத்தனப்படும் பெண்மணி அவளேயென்று அறிந்து மனங்குழம்பினேன். இன்னும், இது ஒரு பெண்ணைப்பற்றிய விஷயமாகையால், கண்டபடி பேசிவிடும் பக்ஷத்தில் பிறகு பேச்சிற்கிடமெனப் பயந்து, என்ன செய்வதென்று தோன்றாமல் நான் தவித்துக்கொண்டிருந்தபொழுது நீயும் வந்து சேர்ந்தாய். அப்பா! இவ்வளவே நான் சொல்லக்கூடியது. ஆனால் எங்களுக்கு எந்த ஊர் என்பதையும், என் யஜமானருடைய பெயர் என்னவென்பதையும் நான் சொல்லமுடியாது" என்று சொல்லிமுடிக்கவே, சபேசனுக்குண்டான சந்தோஷத்திற்கும், ஆச்சரியத்திற்குமளவில்லை. இன்னும் அக்கிழவர் சொன்னது உண்மையென்றும் கண்டுகொண்டான்.

கடைசியில், கிழவர் குறிப்பிட்ட வீட்டின் சமீபம், இருவரும் வந்துசேர, கிழவர் சபேசனுடைய தோளைத் தொட்டு,



"அப்பா! அதோ அந்த வீடுதான். இனி நான் போய்விட வேண்டும். உன் சாமர்த்தியத்தால் தான் அப்பெண் காப்பாற்றப்படவேண்டும். தெய்வம் உனக்கு உதவிபுரியுமாக." என்று சொல்லிவிட்டு, சற்றும் தாமதிக்காமல், மடமடவென்று போய்விட்டார்.

அவர் போனபிறகு, சபேசன் ஒரு மரத்தின் மறைவில் நின்றுகொண்டு, அவ் வீட்டைக் கவனித்தான். வாஸ்தவமே. பக்கத்தில் வீடுகளிருப்பதாகக் காணப்படவில்லை. எங்கும் இருள்சூழ்ந்து, ஒரே நிச்சப்தமாயிருந்தது. பதுங்கியவண்ணம் அவ்வீட்டைச் சமீபித்தான். அதில் சற்றும் ஜன நடமாட்டமிருப்பதாய்த் தோன்றவில்லை. அவ்வீட்டின் நாலாபக்கங்களிலுமிருந்த இரும்பு வேலியை மெல்லத் தாண்டி, அதன் பின்பக்கம் சென்று, மறுபடியும் நன்றாய்க் கவனித்தான். எந்த அறையில் அப்பெண்மணி அடைபட்டிருப்பாளென்பதையும், ஒருகால், அதற்குள், அவள் தன் கற்பையிழந்திருப்பாளோ என்றும், அறியாமல், பதறிய மனதுடன், மறுபடியும், இருட்டில் மறைந்தவண்ணம், முன்பக்கம் சென்று, அங்குக்காணப்பட்ட ஒரு பெரிய கதவு வெளிப்பக்கம் பூட்டப்படாமலிருப்பதைக் கண்டு, அச்சமயம், அதில் கண்டிப்பாய் மனிதர்களிருக்கவேண்டுமென்று நிச்சயித்தான். ஆனாலும், உள்ளே நுழையும் வழி தெரியாமல் தவித்தான். இப்படி நின்றுகொண்டேயிருந்தவன் திடுக்கிட்டான். அதற்குக்காரணம், அச்சமயம், அவன் சோதித்த கதவு மெல்லத் திறக்கப்படும் சப்தம் அவன் செவிகளில் விழுந்தது! படபடவென்று அடிக்கும் இருதயத்துடன், பக்கத்திலிருந்த ஒரு பெரிய தூணின் மறைவில் ஒளிந்துகொண்டான்; மறுநிமிஷம் கதவு திறக்கப்பட்டதும், ஆறடி உயரமுள்ள புலாட்டியர்கள் இருவர் வெளியே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் முதலில் சபேசன் நடுங்கினானென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அதில் ஒருவன்,

"சீச்சீ! நாமிருவரும் போவது பிசகு. இங்கு நம்மில் ஒருவன் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். முதலில்

நீ போய்க் குடித்துவிட்டுவா. பிறகு நான் போகிறேன்.'' என்று தாழ்ந்த குரலில் சொல்ல, மற்றொருவன்,

''போடா பைத்தியமே! அவரை யாரடா இங்கு விழுங்கிவிடுவார்கள்? வா போவோம்.'' என்று தன் தோழனுடைய இருகரங்களையும் பற்றி இழுத்தான். முதல்வன்,

அப்படியானால் வா போவோம். இரு. முதலில், கதவை வெளிப்பக்கம் பூட்டிக்கொள்ளுவோம். நாம் திரும்பி வருவதற்குள், ஐயர் தம் காரியத்தை முடித்துக்கொண்டு கம்பி நீட்டிவிட்டால், நம்முடைய பாக்கிப்பணம் கிடைப்பது கஷ்டம்! அடே! முடிந்தால், அக்குட்டியின் நகைகளை ஒருகைபார்க்கவேண்டும்! ஆஹா! குட்டி மிகவும் அழகுள்ள உருப்படி!'' என்று சொல்லிக்கொண்டே, தன் மடியிலிருந்து, ஒரு பெரிய பூட்டையெடுத்து, கதவைப்பூட்டி, சாவியை இடுப்பில் வைத்துக்கொண்டான்.

அதைக்கண்ட சபேசன், ''அடாடா! இதென்ன கஷ்டம்!'' என்று குழம்பினான். பிறகு, அவ்விருவரும், தங்களிடமிருந்த, பெருந்தடிகளைச் சுவரில் சாத்திவிட்டு, வெளியே சென்றார்கள். ஆனால் தோட்டத்தின் கதவு வரையில் போனவர்கள், அதற்குள், தங்களுடைய ஏற்பாட்டை மாற்றிவிட்டவர்கள் போல, ஒருவன் ரஸ்தாவிற்குள் நுழைய மற்றொருவன் வீட்டைநோக்கி வந்தான்.

இதைக்கண்ட சபேசன், மெல்ல முன் சென்று, தடிகளில் ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம், திரும்பி வந்தவன், கதவையணுகி, தன் மடியிலிருந்து சாவியையெடுத்து, அதைப்பூட்டில் நுழைத்துத் திருப்பிக்கொண்டேயிருக்கையில், புலிபோல் பாய்ந்து, தன் தடியைச்சுழற்றி ஓங்கி அவன் மண்டையில் அடிக்கவே, அவன், மூட்டைபோல் தரையில் விழுந்து மூர்ச்சையானான். உடனே, சபேசன், தன் மேல் சவுக்கத்தில் பாதியைக்கிழித்து, அவன் வாயில் அடைத்துவிட்டு, அவன் தலையில் அணிந்துகொண்டிருந்த தலைப்பாகையை



யவிழ்த்து, அவனுடைய கைகால்களைக் கட்டிவிட்டான். பிறகு, அவனுடைய மடியிலிருந்த, ஒரு தீப்பெட்டியை யெடுத்துக்கொண்டு, கதவைத்திறந்து, உள்ளே ஓடினான். அங்கு, ஒரே இருட்டாயிருந்ததால், நெருப்புக்குச்சிகளைக் கிழித்தவண்ணம், ஒவ்வொரு அறையாகத்தேட ஆரம்பித்தான்.

ஒவ்வொரு நிமிஷமும் தனக்கு ஆபத்து நேரிடக்கூடுமென எதிர்பார்த்து, தன் தடியைக் கையில் தயாராய்த் தாங்கியவண்ணம், கடைசியில், பக்கத்தில் தென்பட்ட படிகளிலேறி மாடியையடைந்தான். மறுநிமிஷம், அப்பெண்மணி அடைபட்டிருந்த அறையைக் கண்டுபிடித்துவிட்டான். அதேசமயம், ''—அச்சண்டாளனின் பெண்ணை இதோ கெடுத்து விடுகிறேன். அப்பாபியையும் இலேசில் விடேன்!'' என்ற வார்த்தைகள் அவன் செவிகளில் விழவே, வீராவேசங்கொண்டு, அவ்வறையை நோக்கியோட, அது உட்பக்கம் பூட்டப்பட்டிருப்பதைக்கண்டு, திகைப்புற்றான். பிறகு அவசரம் பொறுக்கமாட்டாமல், அக்கதவில் காணப்பட்ட ஒரு சந்தின் வழியாய் உள்ளே எட்டிப் பார்க்க, அப் பெண்மணியின் கற்பை யழிக்க நினைத்தவர், அவளுடைய மேல்துணியைப் பிடித்தவண்ணம் நின்றுகொண்டிருப்பதைக்காணவே, ''பேஷ்! நல்ல சமயத்தில் வந்துவிட்டோம்.'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். பிறகு, ''உடனே கதவைத்திறந்து விடு.'' என்று உரத்த குரலில் பலதரம் கூவினான். ஆனால் அது திறக்கப்படாததைக்கண்டு, அதையுடைத்துவிடத் தீர்மானித்து, தன் தடியினால், அதைப்பிளக்க ஆரம்பித்தான். மேலே நடந்த விஷயங்கள் நம் நேயர்களறிந்தனவே.

* * * * *

மறுநாட்காலை 10மணியிருக்கும்.

சபேசன் வெளியில்போகத் தயாராய்த் தன் வீட்டில் நின்றுகொண்டிருந்தான். அவன், ''என்ன ஆச்சர்யம்! நேற்று இரவு நடந்தது ஒரு நாடகம் போலவேயிருக்கிறது.

அதில் நான் இவ்வளவு வேலை செய்தும், அதில் சம்பந்தப்பட்ட முக்கியமான மூவரில் ஒருவரையும் யாரென அறியக்கூடவில்லையே! நான் காப்பாற்றிய அப்பெண்மணி ஒரு நற்குலத்திலுதித்தவள் போல் காணப்படுகிறாள். இன்னும் அவளைக்கெடுக்க நினைத்த அம்மனுஷ்யனை நான் பார்த்தது ஒரு நிமிஷமேயானபோதிலும், அவன், சுபாவத்தில் இப்பேர்ப்பட்ட கார்யங்களைச்செய்யக்கூடிய, ஒரு காமலோலனாய்த் தோன்றவில்லை. எல்லாம்போக, இதைச் செய்யும்படி என்னை ஏவிய அக்கிழவர் போனவிடமெங்கே? ஆஹா! அப்பெண், தானிருப்பது பட்டாபிராமன் தெரு என்று சொன்னாளே. தற்சமயம் நான் போகவேண்டிய வக்கில் தாண்டவம் ஐயருடைய வீடும் அதே தெருவிலிருப்பதால் ஒருகால் அவள் யாரென்பதை அறியக்கூடும். சீச்சீ! ஆனால் நானப்படிச்செய்வது பிசகு. ஏனெனில், அவளைப்பற்றி எதையும் விசாரிப்பதில்லையென்று நான் நேற்று இரவு அவளுக்கு வாக்குக்கொடுக்கவில்லையோ?" என்று அவன் சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது, அங்குவந்த அவன் தங்கை ராஜம்,

"அண்ணா! ராகுகாலம் கழிந்துவிட்டது. போய்விட்டுவா" என்று மரியாதையுடன் சொல்ல, சபேசன் வெளியே சென்றான். அவனுடன் வாசல் வரையில் சென்ற ராஜம், மறுபடியும் உள்ளே சென்றபொழுது.

"பேஷ்! இரட்டைப்பிராமணர்கள் வந்தார்கள்! நல்ல சகுனம்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

சுமார் பத்துநிமிஷ நேரத்திற்கெல்லாம், சபேசன், வக்கில் தாண்டவம் ஐயருடைய வீட்டை அடைந்ததும், அங்கு வெளியில் காணப்பட்ட ஒரு வேலைக்காரனிடம், தன் கார்யத்தைச்சொல்லவே, அவன், தன் யஜமானருக்கு, அவன் காத்துக்கொண்டிருப்பதைத் தெரிவிக்கும்பொருட்டு உள்ளே சென்றான். அவ்வீடு பார்ப்பதற்கு ஒரு மாளிகைபோலிருந்ததுமன்றி, அதில் காணப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் நாகரீகத்தையும், செல்வத்தையும் எடுத்துக்காட்டின.



சற்றுநேரத்திற்கெல்லாம், உள்ளே சென்ற வேலைக்காரன் திரும்பிவந்து, தாண்டவம்ஐயர் அவனையழைப்பதாகச் சொல்ல, சபேசன், உள்ளே சென்றான். ஆனால், அவருடைய அறைக்குள் ஒரு அடியெடுத்து வைத்தவன், வியப்புற்று அப்படியே மரம்போல் நின்றான். அதற்குக் காரணம், அச்சமயம், வக்கில் தாண்டவம்ஐயருடைய பக்கத்தில், அவன் முதல் நாளிரவு காப்பாற்றிய அதே பெண்மணி நின்றுகொண்டிருந்தாள். அவள் அவனைக்கண்டதும், சந்தோஷத்துடன், தாண்டவம்ஐயருடைய தோளைத் தொட்டு,

"அப்பா! நேற்று என்னைக் காப்பாற்றியவர் இவரே!" என்று சொல்லிவிட்டு, மேலும் அங்குத் தாமதிக்க வெட்கி, அவ்வறையை விட்டு ஓடினாள். ஆனால் கொஞ்சதூரம் சென்றதும், நின்று, திரும்பி, மறுபடியும் ஒருதரம் சபேசனை உற்று நோக்கினாள். அவனுடைய முகத்தின் வசீகரத்தையும் அவனுடைய அழகிய கண்களிலிருந்து வெளிக்கிளம்பி வீசிக்கொண்டிருந்த ஒரு காந்தியையும், இன்னும் அவனுடைய சரீரக்கட்டின் நேர்த்தியையும் கண்டு பிரமித்தவள்போற் காணப்பட்டாள். பிறகு, பெருமூச்செறிந்துகொண்டே மேலும் நடந்தாள்.

நிற்க, வக்கில் தாண்டவம்ஐயரைக் கவனிப்போம். அவருக்கு வயது நாற்பது அல்லது நாற்பத்தொன்று இருக்கலாம். ஆனால், பார்ப்பதற்கு முப்பத்தைந்து வயதுள்ளவர் போலவே காணப்பட்டார். அவருடைய முகத்தில், லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் ஒருமித்து, வாசம்செய்துகொண்ருந்தனர்.

அவர், புன்சிரிப்புடன் தம்மிடத்தை விட்டெழுந்து, சபேசனை அணுகி, நன்றியறிவுடன் அவனுடைய கரங்களைப்பற்றிக்கொண்டு, பிரியம்ஒழுக,

"அப்பா! நேற்றிரவு நடந்த எல்லாவற்றையும், என் பெண் என்னிடம் சொல்லிவிட்டாள். நீ அவளை இவ்விதம்

காப்பாற்றியதை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன்.'' என்றார். சபேசன், மரியாதையுடன்,

"ஐயா! அதைப்பற்றி மேலும் பேசாமலிருக்கும்படி விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். தங்களுடைய புதல்வியைப்போல், எந்தப் பெண் ஆபத்தில் சிக்கிக் கொண்டபோதிலும், ஆணாய்ப்பிறந்த எவனும் முடியும் பக்ஷத்தில் காப்பாற்றக் கடமைப்பட்டவன்." என்று சொல்லவே, தாண்டவம்ஐயர்,

"அப்பா! உன்னுடைய உதாரகுணத்தைக்கண்டு நான் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை. சரி. நீ எப்படி அவள் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டதை அறிந்து, அவளைக் காப்பாற்றினாய்?'' என்று வினவ, சபேசன், எல்லாவற்றையும் சீக்கிரம் சொல்லி முடித்தான். அதைக்கேட்ட தாண்டவம்ஐயருடைய ஆச்சரியத்திற்களவில்லை. அவர்,

"சரி. இதை உடனே நாம் போலீஸாருக்குத் தெரிவிப்பதே நலமென்று நினைக்கிறேன்.'' என்றார். சபேசன்,

"ஐயா! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் நான் இப்படிப் பேசுவதற்குக் காரணம், நான் தங்களைக்காட்டிலும், புத்திவாய்ந்தவனென்ற எண்ணத்தினாலன்று. இது ஒரு பெண்ணைப்பற்றிய விஷயமாகையால், இதை நாம் ரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளுவதே உசிதம். தவிர, அவளைக் கெடுக்க நினைத்த அப்பாபியை நாம் கண்டுபிடிக்க வேண்டுமானால், நாம் அப்படிச்செய்யப் பிரயத்தனப்படுகிறோமென்பதை வெளியிடாமலிருக்கும்பக்ஷத்தில் அதை எளிதில் செய்யக்கூடும். எனவே, இதை நாம் போலீஸாருக்குத் தெரிவிக்கும்பக்ஷத்தில், ஊரில் எல்லோரும் இதையறிந்து கண்டபடி பேசுவார்களேயொழிய அதனால், நமக்கு எள்ளளவும் சாதகமேற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. பிறகு தங்களிஷ்டம்.'' என்றான்.

தாண்டவம்ஐயர் அவனுடைய புத்திக்கூர்மையைக் கண்டு மெச்சியவராய், "அப்பா! நீ சொல்லுவது நியாய



மென்றே தோன்றுகிறது. சரி. தற்சமயம், அப்பேச்சை நிறுத்திக்கொள்ளுவோம். ஆமாம்! ஆனால், நீ என்னறைக்குள் வரும்வரையில், இவள் என்னுடைய பெண் என்பது உனக்குத்தெரியாதோ?'' என்று வினவ, சபேசன்,

"தெரியாது. தாங்கள், பேப்பர்களில் விளம்பரம் செய்திருக்கும், அவ்வேலையே, நான் இப்பொழுது இங்கு வந்ததற்குக் காரணம்.'' என்று விடையளித்தான். தாண்டவம்ஐயர்,

"ஓஹோ! அப்படியா? நேற்று இரவு, உன்னைப் பற்றி, என் பிள்ளை ராஜேந்திரன், மிகவும் சிலாகித்துப் பேசினான். அப்பா! நீ நேற்றுச் செய்திருக்கும் கார்யத்தையறிய, உன் புத்திசாலித்தனத்தையும், உதாரகுணத்தையும் நான் சந்தேகிக்க நியாயமில்லை. உன்னைப்போன்ற வாலிபனையே, இதுவரையில் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பா! இவ்வேலையைப்பற்றி நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். இன்றிலிருந்து, நீயும் என்னுடைய ஒரு புதல்வனே என்று மதித்து, நான் உன்னுடைய க்ஷேமத்தைக் கவனிப்பேனென்பதில் சந்தேகமில்லை.'' என்றார்.

சபேசனுடைய நேத்திரங்களில் ஆநந்தபாஷ்பம் ததும்பியது. அவனப்படியே தரையில் மண்டிபோட்டு [illegible]கார்ந்து, அவருடைய பாதங்களைப்பிடித்துக்கொண்டு,

"ஐயா! தற்சமயம், என்னுடைய க்ஷேமத்தையும், சந்தோஷத்தையும் கவனிக்கக்கூடியவர்கள் எனக்கு வேறு யாருமில்லை. இன்னும், இப்பொழுது, தங்களுக்கு என் மீதுண்டாயிருக்கும் நல்ல அபிப்பிராயத்திற்கும், வியக்கத்தக்க பிரியத்திற்கும், நான் எவ்விதத்திலும் அர்ஹனென்பதைச் சீக்கிரம் காட்டிக்கொள்ளுவேன்.'' என்று உறுதியுடன் கூற, தாண்டவம்ஐயர், அவனை அன்புடன் வாரியெடுத்து அணைத்துக்[illegible]கொஞ்சநேரம் சபேசனுடைய குடும்[illegible]ரித்துக்

128768.

கொண்டிருந்தார். கடைசியில், அவனுக்கு விருந்துவான தங்கை ஒருவளுண்டென்பதையறிந்ததும்,

“அப்பா! நேற்று ராஜேந்திரன், என்னிடம் உன்னைப் பற்றிப்பேசியதிலிருந்து, நீ கைம்பெண்களுக்கு மறுவிவாஹம் செய்துவைக்கவேண்டியது மிகவும் அவசியமென்று அபிப்பிராயப்பட்டவனென்று நம்புகிறேன். அப்படியானால், நீ ஏன் சீக்கிரம் அவளுக்கு—” என்று மேலே பேசுமுன், சபேசன்,

“அவள் வைதவ்யமடைந்த அதே தினம், எப்படியாகிலும் அவளுக்கு மறுவிவாஹம் செய்துவைத்துவிடுவதென்று தீர்மானித்துக்கொண்டேன். ஆனால், எனக்கிருக்கும் தற்காலஸ்திதியில், நான் அதை எளிதில் செய்யமுடியவில்லை. இன்னும் சென்ற ஒரு வருஷகாலம் வரையில் அவள் என் எண்ணத்திற்கு இசையக் கண்டிப்பாய் மறுத்துவிட்டாள். கடைசியில், அவளுக்குப் பல காரணங்களை எடுத்துக் காட்டி, ஒரு வழியாய் அவளைச்சரிப்படுத்தி வைத்திருக்கிறேன். அதுவுமன்றி, நம் ஜாதியில், நம்மைப்போல் அபிப்பிராயம் கொண்டவர்கள் மிகவும் சுவல்பமென்பதைத் தாங்களே அறிவீர்கள். ஆகவே இதுவரையில், இவ்விஷயத்தில் எனக்குக் கைகொடுத்து உதவக்கூடிய ஒருவருமகப்படவில்லை.” என்றான்.

“சரி. அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். சீக்கிரம், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்.” என்று தாண்டவமய்யர் சொல்லிக்கொண்டிருக்கையில், அவ்வறைக்குள் நுழைந்த ராஜேந்திரன், சபேசனைக்கண்டதும், ஆவலுடன், அவனையணுகி,

“ஹா! மிஸ்டர் சபேசன்! நீங்கள், நேற்று என் தங்கையைக் காப்பாற்றியதற்கு, நாங்கள் என்ன பிரதியுபகாரம் செய்யக்கூடுமென்பது எங்களுக்குத் தெரியவில்லை.” என்றான். சபேசன், சிரித்துக்கொண்டே,

“அது, நீங்[illegible] விஷயத்தைப்பற்றிப் பேசாமலிருப்[illegible] தகின்.



அச்சமயம், சுமார் இருபத்தொரு வயதுள்ள, ஒரு வாலிபன் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக்கண்டதும் சபேசன், ஆச்சர்யத்துடன், ராஜேந்திரனைப்பார்த்து, தாழ்ந்த குரலில்,

“இவர் சந்நியாசித்தெரு மைனரல்லவோ?” என்று வினவியதும், ராஜேந்திரனுடைய முகத்தில் விசனத்தின் குறிகள் தோன்றின. அவன் உடனே விடையளிக்காமல், பேச்சை மாற்றி,

“வாருங்கள்! என்னறைக்குப் போவோம்.” என்று அழைக்க, இருவரும் அவ்விடத்தைவிட்டுச் சென்றார்கள். ராஜேந்திரன், தன்னறைக்குள் நுழைந்ததும், சபேசனுடைய கரங்களைப் பிரியத்துடன் பிடித்துக்கொண்டு,

“மிஸ்டர் சபேசன்! நாமிருவரும் இணைபிரியாத தோழர்களாயிருப்போமென்று நம்புகிறேன்.” என்றான். சபேசன்,

“ஆஹா! அதில் தடையென்ன? இன்னும் நாம் நண்பர்களாய்விட்டதால், நாம் பேசும்பொழுது ‘மிஸ்டர்’ பட்டம் அனாவசியம்” என்று சிரித்தான். பிறகு, “ஆமாம், கீழே வந்தவன் யாரென்று நீ இன்னும் சொல்லவில்லையே?” என்று கேட்க, ராஜேந்திரன்,

“அவன் என்னுடைய தமையன்.” என்று விடையளித்தான். சபேசன், ஆச்சர்யத்துடன்,

“என்ன? உன் தமையனா? அவன் சந்நியாசித்தெருவிலல்லவோ வசிக்கிறான்?” என்று வினவினான்.

ராஜேந்திரன்:—“வாஸ்தவமே! நீ பேசுவதிலிருந்து உனக்கு அவனைப்பற்றி விஷயங்களெல்லாம் தெரியுமென்றே நினைக்கிறேன். ஆகவே, அவனுடைய கார்யங்கள், என் தந்தைக்குச் சற்றும் பிடிக்கவில்லை ஆகையால், அவனைத்தனிமையிலிருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார்.”

சபேசன் :—"அவனுக்கு விவாஹமாய்விட்டதோ?"

ராஜேந்திரன்:—"ஆய்விட்டது! ஆனால், தற்சமயம், அவன் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு தாசியின் மயக்கத்தில், தன் மனைவியை அவள் பிறந்த வீட்டிலேயே வைத்திருக்கிறான். இதுவே, என் தந்தைக்கும், அவனுக்கு முண்டான மனஸ்தாபத்திற்கு முக்கியகாரணம்."

சபேசன் :—"உன்னுடைய தாயார் சேதியென்ன?"

ராஜேந்திரன் :—"அவள், என் தங்கை ஜானகியைப்பெற்ற ஒரு வருஷத்திற்குள் இறந்துவிட்டாள்."

சபேசன் :—"உனக்குச் சகோதரிகள் எவ்வளவுபேர்."

ரஜேந்திரன்:—"நீ நேற்றுக் காப்பாற்றிய அவள் ஒருவளே."

சபேசன் :—"அவளுக்கு வி-வா-ஹ-ம்—"

ராஜேந்திரன் :—"இன்னும் ஆகவில்லை."

---

## அத்தியாயம் 4.

சபேசனைப்போன்ற வாலிபர்களைத்தவிர, பிராமணஜாதியில் அவனைக்காட்டிலும், வயது முதிர்ந்தவர்களும், அதன் பலனாய் உலகானுபவம் அதிகமுள்ளவர்களுமாகிய பல புத்திமான்கள், பெண்களின் பால்ய விவாஹத்தினால் வரக்கூடிய தீமைகளையும், இன்னும், சிறுவயதில் புருஷனை இழந்த கைம்பெண்களின் மறுவிவாஹத்தின் அவசியத்தையும் நன்குணர்ந்து, செய்துவந்த ஒரு கிளர்ச்சியின் பலனாய், வரவர, கல்விகற்ற பல தனவந்தர்கள், தங்கள் பெண்களுக்கு, 7வயதிலும், 8வயதிலும், விவாஹம் செய்துவைக்காமல், 15-16வயதுவரையில் அவர்களைப்படிக்கவைக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ளலானார்கள்.

நாம் சொல்லும் சமயம், கனகபுரியில், வக்கில் ஸுந்தரம் ஐயரைப்போல், மற்றொருவரும், தம் புதல்விக்கு வயது



17 ஆனபோதிலும், இன்னும், விவாஹம் செய்துவைக்காமல், படிக்கவைத்திருந்தார். கோபாலய்யர் என்ற அவர், அவ்வூர், அம்மையப்பன் தெருவில், பரம்பரையாய் மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்துவந்த, ஒரு பெரிய நற்குலத்திலுதித்தவர். தற்சமயம் அவருக்கு வயது சுமார் நாற்பது இருக்கலாம். அவர் நன்றாய்ப் படித்திருந்தபோதிலும், தமக்கு ஏராளமான சொத்திருப்பதைக்கண்டு, ஆதியிலிருந்தே உத்தியோகம் வேண்டாமென்று இருந்துவிட்டார். ஆனால் அவரைப்போன்ற பல பணக்காரர்களைப் போல் நாம் என்ற அகம்பாவங் கொள்ளாமலும், தங்களுடைய பெற்றோர்கள் வைத்துப்போன ஐச்வர்யத்தை, துன்மார்க்கங்களில் கண்டபடி விரயம் செய்யாமலும், தம்மால் முடிந்தவரையில், பொதுஜன நன்மைக்காக உழைத்துவந்தார். அவருடைய பெற்றோர்களுக்கு, அவர் ஒரே குழந்தையாகையால், அவர்கள் உயிருடனிருந்தவரையில், அவரை மிகவும் செல்வமாக வளர்த்துவந்ததுமன்றி, அவருக்குப் பதினெட்டு வயதிலேயே, பதின்மூன்று வயதுள்ள ஒரு பெண்ணை விவாஹம் செய்துவைத்துவிட்டார்கள். தம் இஷ்டத்திற்கு விரோதமாய், தம் பெற்றோர்கள், இவ்வளவு பால்யத்தில் தமக்கு விவாஹம் செய்துவைத்ததால், அவருக்குண்டான கோபமும் வருத்தமும், மறுவருஷம், அவருடைய சம்ஸாரம், அவரிடம் வந்ததும், மெச்சத்தக்க அவளுடைய குணாதிசயங்களையும், பார்ப்போர் மயங்கத்தக்க அவளுடைய ரூபலாவண்யத்தையும், எல்லாம் போக, அவளுக்குத் தம்மீதிருந்த அளவு கடந்த காதலையும் கண்டு, பறந்தோடிவிட்டன. இவ்விதம், தம் மனைவியுடன், இரண்டு வருஷகாலம் சந்தோஷமாய்க் காலம் கழித்துவந்தார். அதன் முடிவில் அப்பெண்மணி, தன் ஞாபகார்த்தமாய், தற்சமயம் பதினேழு வயதுள்ள கமலம் என்ற பெண்ணைப் பெற்றுவைத்துவிட்டு, அவளைப் பிரஸவித்த எட்டாம் நாள் பரலோகம் சென்றுவிட்டாள். அதுவரையில் சந்தோஷசாகரத்தில் மூழ்கியிருந்த கோபாலய்யர், தாம் சற்றும் எதிர்பார்க்காதவிதம், தம் மனைவி

இறந்ததைக்காண, தலைமேல் இடி விழுந்ததைப்போலச் சித்தப்பிரமைகொண்டு, சுமார் ஒரு வருஷகாலம், சரியான ஊணுறக்கமின்றி, வயதுசென்ற, தம் பெற்றோர்களுடனும் பேச இஷ்டமில்லாமலிருந்துவந்தார். தம் ஒரே புதல்வன் இவ்விதம் உருகுவதைக்கண்ட அவருடைய தந்தை, ஒருகால், அவருக்கு மறுவிவாஹம் செய்துவைக்கும் பக்ஷத்தில் அவருடைய வருத்தம் குறையக்கூடுமென்று நம்பி, தம்மால் முடிந்தமட்டும் பிரயத்தனப்பட்டும் கோபாலய்யர் மறுவிவாஹம் செய்துகொள்ளக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார். சதா பைத்தியம் பிடித்தவர்போலத் தம் அறையிலேயே உட்கார்ந்துகொண்டு, தம் மனைவியின் படத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம், சிறு குழந்தையைப்போல, விம்மி விம்மியழுவதிலேயே தம் பொழுதைப் போக்கினார். இவ்விதம் சுமார் ஐந்தாறு வருஷகாலம் கழிந்தது. கடைசியில் தம் பெற்றோர்களுடைய தேகவலிமை குறைந்துவருவதைக்கண்டும், இன்னும் தம் இதர சிநேகிதர்களுடைய புத்திமதிகளைக் கேட்டும், தம் முப்பதாவது வயதில், தற்சமயம் அவருடன் வாழ்ந்துவந்த காமாக்ஷியென்ற பெண்ணை இரண்டாவது மனைவியாகக்கொண்டார். இது நடந்த ஐந்து வருஷகாலத்திற்குள், அவருடைய பெற்றோர்கள் இறக்கவே, அதுவரையில் சம்ஸாரசாகரத்தின் ஆழத்தைச்சற்றுமறியாதவராகையால், தம்குடும்பத்தைச் சமாளிக்கும் வழிதெரியாமல், மயங்கினார். இன்னும் அதற்குள் அவரிடம் வந்துவிட்ட காமாக்ஷி, பார்ப்பவர்கள் ஏமாறும் விதம் அபிநயித்தபோதிலும், வாஸ்தவத்தில் தன் புருஷன்மீது பிரியமுள்ளவளாகவாவது, அல்லது அவருடைய கவலையையும் வருத்தத்தையும், சற்றும் லக்ஷியம் செய்பவளாகவாவது காணப்படவில்லை. அவளைத் தான், மணந்துகொண்டதற்குக்காரணம், அவருடைய செல்வமே என்று நினைத்தவள்போல, சதா தன்னைத்தானே சிங்காரித்துக்கொள்ளுவதும், வம்பு பேசுவதுமாயிருந்தாள். இதைக் கண்ட கோபாலய்யர் உலகத்தையே வெறுத்து, கொஞ்சகாலம் தம்மிஷ்டப்படி வெளியூர்கள் சுற்றவேண்டுமென்று



பிரியப்பட்டு, திடீரென்று ஒரு நாள் அச்சமயம் சுமார் பதினொரு வயதுள்ள தம் அருமைப்புதல்வி கமலத்தைச் சென்னையிலிருந்த அவளுடைய பாட்டனிடம் அனுப்பிவிட்டார். இன்னும், அச்சமயம், காமாக்ஷியின் தாய் தகப்பன் எல்லோரும் அவருடைய வீட்டிலேயேயிருந்ததால், அவளைப்பற்றிய கவலை சற்றுமில்லாமல், இரண்டு மாத காலத்திற்குள் திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டுப் போனவர், சுமார் நான்கு வருஷங்கள் வரையில் போனவிடமே தெரியாமற் போய்விட்டார். எனவே அவர் மறுபடியும் திரும்பிவந்து, மூன்றுநான்கு வருஷகாலமேயிருக்கும். அப்பொழுதும் தம் வீட்டில் என்ன நடக்கிறதென்பதைச் சற்றும் கவனிக்காமலும், தம் மனைவி காமாக்ஷி கேட்கும் பொழுதெல்லாம், காரணத்தையறியாமலே, அவள் வேண்டுமென்று சொல்லும் பணத்தைக்கொடுப்பதுமாயிருந்தார். ஆனால் அவர் திரும்பிவந்தது முதற்கொண்டு காமாக்ஷியின் நடவடிக்கைகளிலும், வெளித்தோற்றத்திலும் மாறுதல்கள் காணப்பட்டன. சதா, தன் பர்த்தாவின் சமீபத்திலேயேயிருந்து, அவருடைய வருத்தத்தைக் குறைத்துச் சந்தோஷத்தைப்பெருக்க, தன்னால் முடிந்தவரையில் முயன்று வந்தாள்.

நிற்க, பலகாரணங்களையுத்தேசித்து, கோபாலய்யர், தம் புதல்வி கமலத்தை அவளுடைய பாட்டின் வீட்டிலேயே வைத்திருந்தார். அப்பெண்மணிக்குத் தற்சமயம் வயது பதினேழு என்று முன்னமேயே சொல்லிவிட்டோம். அவள், அழகிலும், குணங்களிலும், தன் தாயாரைப் போலவேயிருந்தாள். கோபாலய்யர், அவளைத் தம்முயிர்நிலையென்றே நினைத்து, அவள்மீது அளவற்ற பிரியத்தை வைத்திருந்தார். சென்னையில் வாசித்துக்கொண்டிருந்த கமலம், ஒவ்வொருவருஷமும், தன் பள்ளிக்கூடம் சாத்தப்பட்டதும் தன் தந்தையிடம் வந்து, இரண்டு மூன்று மாதங்கள் அவருடனிருப்பது வழக்கம். நாம் சொல்லும் சமயம், அவள் இறுதியாக அவரிடம் வந்துபோய், ஐந்து மாதகாலமே இருக்கும். கோபாலய்யர், அவளுடைய

படிப்பை அவ்வருஷத்துடன் நிறுத்திவிட்டு, அவளுக்கு விவாஹம் செய்துவைக்க நிச்சயித்திருந்தார். ஆனால், அவர் தம் அருமைப் புதல்விக்குப் பிள்ளை தேடவேண்டிய அவசியமில்லாமலிருந்தது. அதற்குக்காரணம் இதுவே:— கோபாலய்யருடைய தந்தையுடன் கூடப்பிறந்த, ஜகதீச அய்யர் என்ற ஒருவருண்டு. அவருடைய ஒரே புதல்வியாகிய, தற்சமயம், சுமார் நாற்பத்தைந்து வயதுள்ள பொன்னம்பாள் என்பவள், கனகபுரியிலேயேயிருந்துவந்தாள். அவளுக்குள்ள மூன்று புதல்வர்களில், கடைப்பிள்ளையாகிய பாலகிருஷ்ணன் என்பவன் தன் பாட்டனுக்கு ஸ்வீகாரமானதையால், அவனுக்கும், தற்சமயம் கோபாலய்யருக்குள்ள, அவ்வளவு சொத்துண்டு. இன்னும் அவன் அச்சமயம், கனகபுரியில் பி. ஏ. பரிக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். சிறுவயதிலிருந்தே அவனும், கமலமும், அடிக்கடி சந்தித்து, விளையாடியவர்களானதையால், அதன் பலனாய் அவ்விருவருக்குள், ஒருவித அன்னியோன்னியம் ஜனித்து, அது வரவரக் காதலாய் மாறியிருந்தது. இதைக்கண்ட, கோபாலய்யரும், அவருடைய தமக்கை தர்மாம்பாளும், பிரும்மன் அவ்விருவருக்குமே, முடிந்துபோட்டிருப்பதாக நினைத்துச் சந்தோஷித்தார்கள். இன்னும், கமலம், அழகில் நிகரற்றவளென்றால், பாலகிருஷ்ணன், அவளுக்கு எவ்விதத்திலும் கீழ்ப்பட்டவனல்லன். தற்சமயம், அவனுக்கு வயது சுமார் இருபது அல்லது இருபத்தொன்று இருக்கலாம். அவனுடைய கம்பீரவதனத்தையும், அதற்கேற்ற நடையுடைபாவனைகளையும் கண்டவர்கள், கமலம், அவனை அடைய, அதிர்ஷ்டசாலியாயிருக்க வேண்டுமென்றே எண்ணுவார்கள்.

நாம் சொல்லும் தினம் காலை எட்டுமணியிருக்கும்.

கோபாலய்யர், தம் அறையில் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தார். அச்சமயம், அங்குவந்த அவருடைய மனைவி காமாக்ஷி, ஏதோ பேசநினைப்பவள்போலும், ஆனால், தன்மனதிலிருப்பதை வெளியிடப் பயந்தவள்போலும் காணப்பட, கோபாலய்யர்,



"காமாக்ஷி! ஏன் தயங்குகிறாய்? என்னவேண்டும்?" என்று வினவினார்.

காமாக்ஷி:—(மிகவும் பயபக்தியுடன்) "தயவுசெய்து என் தைர்யத்தை மன்னிக்கவேண்டும். நான் உங்களிடம் வந்து கிட்டத்தட்ட பத்துவருஷகாலமாகப்போகிறது. நானிங்கு, வந்த இரண்டு வருஷத்திற்கெல்லாம், என்னைத் தனிமையில் விட்டுப்போனவர், ஐந்துவருஷகாலம் போனவிடம்தெரியாமற்போய்விட்டீர்கள். பிறகு திரும்பிவந்தும், இதுவரையில், நீங்கள் என்னுடன் ஒருநிமிஷ நேரமாவது பிரியத்துடன் பேசியறியேன். ஐயோ! இவ்விதம் உங்களால் வெறுக்கப்பட நான் செய்த குற்றம் என்னவென்பது எனக்குத் தெரியவில்லையே?"

கோபாலய்யர்:—"காமாக்ஷி! இதற்காக நீ இப்படி வருத்தப்படுவது பிசகு. வேண்டாம் அழாதே. நீ குற்றம் செய்தாயென்று சொன்னது யார்?"

காமாக்ஷி:—"நீங்கள் ஏற்கனவே பலவித துக்கங்களை அனுபவித்திருப்பதால் நானும் உங்கள்மேல் புகார் சொல்லுவது நியாயமல்லவென்று இதுவரையில் பொறுத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இப்படி எவ்வளவு காலம் பொறுக்கமுடியும்? வாஸ்தவமே நான் முதலில் உங்களிடம் வந்ததும், புத்திமட்டினாலும், பதிபக்தியின் மகிமையை அறியாமலும், கொஞ்சம் அசட்டுத்தனமாய், உங்களுடைய சௌகர்யங்களைக் கவனிக்காமலிருந்துவிட்டேன். அதற்காக, என்னை மன்னித்துவிடும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் உங்களுடன் கூடி வாழ ஸம்மதித்ததற்குக் காரணம், நானும் மற்றப் பெண்களைப்போல உங்களுடன் பலவித சந்தோஷங்களை அனுபவிப்போமென்ற நம்பிக்கையாலல்லவோ? அந்தோ! நானிப்படி நிராஹரிக்கப்பட என்ன பாபம் செய்தேனோ? நாதா! அப்படியே என்னிடம் குறைகளும், குற்றங்களுமிருந்தபோதிலும், அவைகளைத் தீர்ப்பதும், மன்னிப்

பதும், உங்களுடைய கடமையல்லவா?" என்று மேலும் அழலானாள்.

கோபாலய்யர்:—(பிரியத்துடன்) "அடியே! நீ இவ்வளவு அசடென்பது எனக்குத் தெரியாது. வாஸ்தவமே நீ உன்வயதுப் பெண்கள் அனுபவிக்கவேண்டிய எல்லாச் சுகங்களையும் அனுபவிக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அதற்குக் காரணம், எனக்கு உன் மீதுள்ள வெறுப்பினாலென்று நீ நினைப்பது பிசகு."

காமாக்ஷி:—"இதைக்கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறேன். உலகில், முதல்தாரத்தை இழந்த புருஷர்கள், தங்களுடைய இரண்டாவது மனைவிகள் தங்களிடம் வந்ததும், தங்கள் முதல் மனைவிகளிறந்ததற்குக் காரணம், தங்கள் இரண்டாவது தாரங்களையென்று நினைத்து அவர்கள்மேல் வெறுப்படைவது சகஜம். எனவே, நீங்கள் என் மீது வெறுப்புக்கொள்ளவில்லை என்பதை அறியச் சற்றுச் சமாதானமடைகிறேன்."

கோபாலய்யர்:—"அடிபோடி அசடே. வீணாய் மனதை வருத்திக்கொள்ளாதே." என்று சொல்லிவிட்டுக் கொஞ்சநேரம் கழித்து, அப்பேச்சை மாற்றும்பொருட்டு, "ஆமாம்! சென்ற ஒருவாரமாக, உன் அத்தை பிள்ளை சிச்சுவைக் கண்ணிலேயே காணோமே? என்ன சமாசாரம்?" என்று வினவினார்.

'சிச்சு' என்ற பெயரைக்கேட்டதும் காமாக்ஷி திடுக்கிட்டாள். அவளுடைய முகம் வெளுத்தது. ஆனால் அச்சமயம், கோபாலய்யர், வேறுபக்கம் திரும்பிக்கொண்டிருந்ததால், அவளுடைய குழப்பத்தைக் கவனிக்கவில்லை. அதை அறிந்த காமாக்ஷி, தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு,

"அவன், ஏதோ கார்யமாகச் சென்னைக்குப்போயிருக்கிறான். அநேகமாய், நாளைக்கு வந்துவிடுவான்." என்று விடையளித்தாள்.



"சென்னைக்குப்போயிருக்கிறானா? இப்பொழுது அவனுக்குப் பரீக்ஷை சமயமல்லவோ?" என்று கோபாலய்யர் வினவ, காமாக்ஷி, அவ்விஷயத்தைப்பற்றிப் பேச இஷ்டப்படாதவள்போல,

"அதென்னவோ; எனக்குத்தெரியாது. சரி. உங்களுக்கு ஸ்நாநம் பண்ண வெந்நீர் எடுத்துவைக்கச் சொல்லட்டுமா?" என்று கேட்க, கோபாலய்யர்,

"ஆகா. வைக்கச்சொல்லு. இதோ, வந்துவிட்டேன்." என்றார்.

சிச்சு என்பவன், நம் கதையில் ஒரு முக்கிய புருஷனாகையால், அவனைப்பற்றி இங்குக் கொஞ்சம் சொல்லவேண்டியது மிகவும் அவசியம். அவன், காமாக்ஷியின் அத்தை பிள்ளையென்பதைக் கோபாலய்யரே சொல்லிவிட்டார். நாம் சொல்லும் சமயம், அவனுக்கு வயது இருபத்தேழுக்கு மேலிருக்கும். அவனும் அச்சமயம் கனகபுரிக் காலேஜில், பி. ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். அதுவரையில், அவன் அப்பரீக்ஷைக்கு, மூன்றுதரம் போயிருந்தும், அதில் ஒருபாகங்கூடத் தேறவில்லை. இன்னும், கனகபுரியில், ரங்காட்டமே பிழைப்பாயுள்ள பலர், அவனுடன், அவ்வாட்டமாடப் பயப்படுவார்களென்றால், அவனுடைய குணாதிசயங்களை நாம் வர்ணிக்கவும் வேண்டுமோ? அவனுடைய அயோக்கியத்தனத்தையும், துர்நடத்தைகளையும், அறியாதவர் ஒருவருமில்லையாகையால், அவனுடைய தாயார், பொன்னுப்பாட்டி, எவ்வளவோ சிரமப்பட்டும், அவனுக்கு மனந்துணிந்து பெண்கொடுப்பவர் யாருமில்லை. மேலும், அவன் பணத்தை ஓட்டாஞ்சல்லிபோல் செலவழிப்பதையும், இன்னும் நாளுக்கொருவித உடுப்புக்களையணிந்துகொள்வதையும் கண்ட பலர் ஆச்சர்யப்பட்டதுண்டு. அதற்குக் காரணம், அவனுக்கு யாதொரு சொத்துமில்லையென்பது எல்லோருமறிந்தவிஷயம்.

நிற்க, கோபாலய்யர், ஸ்நாநம் செய்யும்பொருட்டுத் தம்மறையை விட்டு வெளியேபோகுந்தறுவாயில், அவ்

வீட்டு வேலைக்காரன் ஒருவன், அங்குவந்து, அவரிடம் மரியாதையுடன் இரண்டு கடிதங்களைக் கொடுத்தான். அதில் ஒன்று சாதாரணக் கல்யாணப்பத்திரிகை. மற்றொன்றைக்கண்டதும், கோபாலய்யருடைய முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது.

"ஆஹா! இது குழந்தை கமலத்தின் கையெழுத்தல்லவோ!" என்று சொல்லிக்கொண்டே ஆவலுடன், அதைப் பிரித்து வாசித்தார். ஆனால், வர வர, அவருடைய முகத்தில் ஆச்சர்யத்தின் குறிகள் காணப்பட்டன. அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:—

"அப்பாவுக்கு கமலம் அநேக நமஸ்காரம். இப்பவும், எனக்கு, இனி ஒருநிமிஷநேரங்கூட உங்களைவிட்டுப் பிரிந்திருக்க மனமில்லையாகையால், இக்கடிதத்தைத் தந்திபோல் பாவித்து, உடனே யாரையாவது அனுப்பி, என்னைத் தங்களிடம் அழைத்துக்கொள்ளவும். இப்படிக்கு,
உங்கள் பிரியமுள்ள, கமலம்"

இவ்வளவே! கோபாலய்யர், கொஞ்சநேரம், ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்றார். "என்ன ஆச்சர்யம்? இவள், தன் படிப்பை, இப்படித் திடீரென்று நிறுத்தியதன் காரணமென்ன? ஒருகால், அவளுடைய பாட்டனும், பாட்டியும் அவளை ஹிம்சிக்கிறார்களோ? சீச்சீ! அவர்களுக்கு அவள் மேலிருக்கும் வாஞ்சையை நான் நன்கறிந்தும், இவ்விதம் அவர்கள்மீது சந்தேகிக்கலாமோ? ஆனால், குழந்தை தக்க காரணமில்லாமல் இப்படி எழுதமாட்டாள். ஆகவே, உடனே, யாரையாவது அனுப்பி, அவளை அழைத்துவரச் சொல்லவேண்டும். ஆனால் யாரை அனுப்பலாம். வேலைக்காரர்களில் ஒருவனை அனுப்புவது சரியல்ல. பேஷ்! பேஷ்! இன்று வெள்ளிக்கிழமையல்லவோ? சனி, ஞாயிறு, காலேஜ் கிடையாதே!" என்று தமக்குள் சிந்தித்துக்கொண்டே, தம் வேலையாட்களில் ஒருவனை அழைத்து, உடனே, சென்று தம் மருமகன் பாலகிருஷ்ணனை அழைத்துவரும்படி உத்தரவிட்டார்.



பிறகு, கொல்லைப்பக்கம், ஸ்நாநத்திற்குப் போனவர் வழியில், காமாக்ஷியைக்கண்டதும்,

"அடியே! இன்று கிட்டுவை (பாலகிருஷ்ணன்) சென்னைக்கனுப்பிக் குழந்தையை அழைத்துவரச் சொல்லப் போகிறேன்." என்று சொல்ல, காமாக்ஷி, ஆச்சர்யப்பட்டவளாய்,

"ஏன்? என்ன சமாசாரம்? அவளுக்கு இப்பொழுது தானே பள்ளிக்கூடம் திறந்திருக்கிறார்கள்!" என்று வினவினாள். கோபாலய்யர்,

"அதென்னவோ? குழந்தை உடனே வந்து அழைத்துப்போகும்படி கடிதம் எழுதியிருக்கிறாள்." என்று விடை அளித்துக்கொண்டே போய்விட்டார்.

காமாக்ஷி "என்ன ஆச்சர்யம்! இதில் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். இனி, நான், இந்தச்செருக்கியின் அட்டஹாஸத்திற்கெல்லாம் உட்படவேண்டும்." என்று பெருமூச்செறிந்தாள். அச்சமயம், அவளுடைய முகத்தில் பல மாறுபாடுகள் காணப்பட்டன. ஆனால், அவைகள், கமலத்தினிடம் அவளுக்கிருந்த பயத்தினாலோ அல்லது பொறாமையினாலோ என்று அறியமுடியாமலிருந்தன. அவை எப்படியிருந்தபோதிலும், கமலம், அங்குவருவதில், அவளுக்குச் சற்றும் இஷ்டமில்லையென்பது நிச்சயம். கடைசியில் சமையலறைக்குள் சென்றவள், அங்குச் சமையற்காரி, அகிலாண்டம்மாள் சற்றும் மரியாதையின்றி, அடுப்புக்குமுன் காலை நீட்டிக்கொண்டு, சுட்ட ஒரு சர்க்கரைவள்ளிக் கிழங்கைத் தின்றவண்ணம், உட்கார்ந்திருப்பதைக்கண்டதும்,

"அடியே! என்னடி இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? மணி ஒன்பது ஆகப்போகிறதே. சீக்கிரம் சமையல் செய். இந்தா! உன்னிடம், இன்னொரு சமாசாரம் சொல்லவேண்டும். நாளைக்குக் கமலம் வரப்போகிறாளாம். ஜாக்கிரதையாயிரு." என்று கூறியவண்ணம், அகிலாண்டம்மாளை

ஒருதரம் குறிப்புடன் நோக்கினாள். ஆனால், அக்கிழவி, அதைச்சிறிதும் லக்ஷியம் செய்யாமல்,

"யார் வந்தாலும் நேக்கு அக்கரையில்லே." என்று திமிருடன் விடையளித்துவிட்டு, அடுப்பிலிருந்த இன்னொரு கிழங்கை எடுத்து, உரிக்க ஆரம்பித்தாள்.

பத்துநிமிஷ நேரத்திற்கெல்லாம் வந்துசேர்ந்த பாலகிருஷ்ணன், தன் மாமன் கொல்லைப்பக்கத்திலிருப்பதை அறிந்து, அங்குச் சென்றான். அவனைக்கண்டதும், கோபாலய்யர்,

"கிட்டு! உனக்கு இரண்டு நாள் காலேஜ் கிடையாதே?" என்று கேட்க, கிட்டு, மரியாதையுடன்,

"கிடையாது. ஆனால்—" என்று தயங்கினான்.

"ஏண்டா! ஏன் விழுங்குகிறாய்? என்ன சமாசாரம்?"

"ஒன்றுமில்லை சமீபத்தில் எங்கள் காலேஜில் ஒரு நாடகம் போடப்போகிறோம். அதில் நானும் சேர்ந்திருப்பதாலும், அதற்காக, நாளையிலிருந்து அப்பியாஸம் செய்ய ஆரம்பிக்கப்போகிறதாலும்—"

"சே! சே! இவ்வளவுதானே? இதோ பார்! சென்னையிலிருந்து கமலம், உடனே யாரையாவது அனுப்பித் தன்னை அழைத்துவரும்படி கடிதமெழுதியிருக்கிறாள். உன்னை அனுப்பலாமென்று பார்த்தேன்."

'கமலம்' என்ற பெயரைக்கேட்டதும், கிட்டுவின் முகம் மலர்ந்தது. அவன் அடக்கமாட்டாத ஆவலுடனும், சந்தோஷத்துடனும்,

"மாமா! நான் கண்டிப்பாய்ப் போகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம்!" என்றான்.

கோபாலய்யர், சிரித்துக்கொண்டே,

"ஏண்டா! ஏதோ நாடகமென்றாயே?" என்று வினவ, கிட்டு,

"அதனால் ஒன்றும் பாதகமில்லை!" என்றான்.



"கமலத்தின் பேரைக்கேட்டதும் பாதகமில்லையோ? போக்கிரிப்பயலே! சரி; எந்த வண்டிக்குப் போகிறாய்?"

"சாயந்தரம் ஐந்துமணி வரையில் வண்டி இல்லை."

"சரி; அந்த வண்டிக்குப் போ. வீட்டில் ஒன்றும் விசேஷமில்லையே?"

இதற்குள், கோபாலய்யர், ஸ்நானம்செய்து, உடம்பைத் துடைத்துக்கொண்டுவிட்டதால்,

"வா; உள்ளே போவோம்." என்று சொல்ல, இருவரும் உள்ளே சென்றார்கள். கோபாலய்யர், மறுபடியும், தம் மனைவி காமாக்ஷியைப் பார்த்ததும்,

"அடியே! நேற்றுச் சோமாசி பண்ணினையே; இருந்தால், கிட்டுக்குக் கொஞ்சம் கொடு." என்று சொல்லிக்கொண்டே, கிட்டுவின்பக்கம் திரும்பி, "போடா! உள்ளே போய் வாங்கிச்சாப்பிடு; இதோ நான் வேஷ்டி கட்டிக்கொண்டு வருகிறேன்." என்று, தம் அறையை நோக்கி நடந்தார்.

நிற்க, பாலகிருஷ்ணன், இன்னும் 24மணி சாவகாசத்திற்குள், தன் காதலியைக் காணப்போகிறோமென்ற சந்தோஷத்தில், தன்னையே மறந்தான். சமையலறையின் பக்கத்திலிருந்த ஒரு பெரிய அறையில் காணப்பட்ட ஒரு அழகிய ஊஞ்சற்பலகையில் உட்கார்ந்துகொண்டதும், காமாக்ஷி, ஒரு வெள்ளித்தட்டில், இரண்டு சோமாசிகளை வைத்து, அவன் முன் கொண்டுவந்து வைத்தாள். ஆனால், பாலகிருஷ்ணன் ஞாபகம் அங்கில்லாததால் வெள்ளித்தட்டை உற்றுநோக்கியவண்ணம் இருந்தானேயொழிய, பக்ஷணத்தைத் தொடவில்லை. அவனுடைய மனோநிலைமையைக் கண்ட காமாக்ஷி, சிரித்துக்கொண்டே,

"கிட்டு! சோமாசியைத் தின்னு; அதற்குள் கமலமில்லை." என்று பரிஹசிக்கவே, திடுக்கிட்டவனாய், அதைப் புசிக்க ஆரம்பித்தான். உடனே, காமாக்ஷி, அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள். புசித்துக்கொண்டேயிருந்த பாலகிருஷ்ணனுடைய பார்வை, நாலாபக்கங்களிலும் அலைந்தது.

மறுபடியும் ஆச்சர்யப்பட்டவன்போல் திடுக்கிட்டான். அதற்குக் காரணம் சமீபத்தில் போடப்பட்டிருந்த ஒரு சாய்வு நாற்காலியின், இரு சட்டங்களிலும், தன் கால்களை ஒய்யாரமாய்ப் போட்டுக்கொண்டு, மிகவும் அட்டகாசத்துடன் நம் சமையற்காரி அகிலாண்டம்மாள் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவள், தன்னைப் பாலகிருஷ்ணன் வெறுப்புடன் உற்றுநோக்குவதைக் கண்டதும், மிகவும் மரியாதையற்ற குரலில்,

“ஏண்டாப்பா! என் மூஞ்சியிலே என்ன வச்சிருக்கு? என்னமோ, சுட்டுடராப்பலே பாக்கரயே?” என்றாள்.

பாலகிருஷ்ணன் வஞ்சகமாய்ச் சிரித்துக்கொண்டே,

“இல்லை பாட்டி; நான் சமையற்காரிகள் உள்ள பல பணக்காரர்களுடைய வீட்டிற்குப் போயிருக்கிறேன். என் வீட்டிலும், ஒரு அம்மாள் இருக்கிறாள். ஆனால், அந்தப் பைத்தியங்களுக்கெல்லாம், இவ்விதம், உங்களைப்போல், தன் யஜமானியின்பொருட்டுப் போடப்பட்ட நாற்காலியில் உட்காரும் விதம் தெரியவில்லை. நான் இங்கு வரும்பொழுதெல்லாம் நீர் இப்படி உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்ப்பதால், இவ் வீட்டிற்கு யஜமானி நீரா? அல்லது என் மாமியா? என்பது எனக்குத் தெரியவில்லை.” என்றான். அகிலாண்டம்மாள், அடக்கமாட்டாத கோபத்துடன்,

“ஆரடா நீ? தடபுடலா அதிகாரம் பண்ணரயே; நான் இஷ்டப்படிதான் உட்காருவேன்; என்னைக் கண்டிக்க நோக்கு இங்கே ஒரு பாத்தியமுமில்லை.” என்று சீறி விழுந்தாள்.

“பாட்டி! ஆனால், இந்த வீட்டில் எனக்கு அதிகாரமில்லையென்றே நினைத்துவிட்டீரோ?”

“கடையவே கடையாது; இந்தாடாப்பா; வீணா என்னை வம்புச் சண்டைக்கு இழுக்காதே; ஆமாம்! நேக்கு கெட்ட கோவம் வந்துடும்.”

பாலகிருஷ்ணனுடைய முகம் கோபத்தினால் மாறியது.

“சீச்சீ! முண்டமே! வாயை மூடு. உன் கோபம் என்னை எரித்துவிடுமோ? பீடை! உன்னுடன் பேசுவதே



மானக்கேடு.” என்று சொல்லிக்கொண்டே, வெறுப்புடன் எழுந்துபோய்விட்டான்.

தான் இவ்விதம் அவமானப்படுத்தப்பட்டதைக் கண்ட அகிலாண்டம்மாள், கோபத்தில் தன்னைத்தானே மறந்தவளாய், பதினேழுவயதுப் பெண்போல், நாற்காலியிலிருந்து, ஒரே துள்ளலாய்த் துள்ளி, ஆவேசங் கொண்டவள்போல், சமையலறைக்குள் ஓடி, அங்குத் தன் கைகளைப் பிசைந்தவண்ணம் நின்றுகொண்டிருந்த காமாக்ஷியை ஒரு தரம் உக்கிரத்துடன் நோக்கிவிட்டு,

“அடியே! பாத்தியாடி; அந்தப்பயல் என்னைப் பேசிய பேச்சே? இப்படி இங்கேவரும் நண்டுசிண்டுகளெல்லாம், என்னைக் கண்டபடி பேச, என்னால் பொறுக்க முடியாது.” என்று கூச்சலிட்டாள். காமாக்ஷி,

“அடி அகிலாண்டம்! நீ இப்படி அனாவசியமாய், வம்பு செய்வது சரியன்று; வேண்டாம்; நான் சொல்வதைக் கேள்.” என்று கெஞ்ச, அகிலாண்டம்மாள் மேலும் ஆத்திரத்துடன்,

“அடியே! என்னடி நீயும் என்னே அதிகாரம் பண்ணப் பாக்கறே? உஷார்!” என்று கர்ஜித்தாள்.

காமாக்ஷி, பயந்த பார்வையுடன் நாலாபக்கங்களையும் பார்த்துக்கொண்டே, கவலையுடன் அவளையணுகி, அவளுடைய வாயைத் தன் கரங்களால், பொத்திக்கொண்டு,

“அடியம்மா! உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு; தயவுசெய்து மெல்லப் பேசு.” என்று மன்றாடினாள்.

“ஆமாண்டி! நோக்கோசரம், நான் இனிமே பேசக் கத்திக்கணும்! ஆமாம்! இப்பவே சொல்லிட்டேன். இங்கே, வரவா ஆராவது எங்கிட்ட வம்புக்கு வந்தால்—” என்று அப்பாட்டி மேலே பேசுமுன், காமாக்ஷி மறுபடியும் அவளுடைய வாயைப்பொத்தி,

“அடி அகிலாண்டம்! உன்னைக்கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னைச் சந்தியில் இழுக்காதே; ஏண்டி! நான் உனக்குச் செய்ததெல்லாவற்றையும் மறந்துவிட்

யாடியே? வேண்டாம்; என்னைக் கெடுத்துவிடாதே." என்று மேலும் கெஞ்சினாள்.

"ஒன்னே கெடுக்கப்படாதுன்னுதான் இதுவரையிலே பொறுத்துக்கொண்டிருந்தேன்; இனிமே என்னால் முடியாது. ஆமாம்; ஜாக்கிரதையாயிரு." என்று கண்டிப்பாய்ப் பயமுறுத்தவே காமாக்ஷியின் முகம் கோபத்தினாலும், வெறுப்பினாலும் விகாரமடைந்தது. ஆனால், அதைக்காட்டிக் கொள்ளப் பயந்தவள்போல், வேறுபக்கம் திரும்பிக்கொண்டாள். அவளுடைய கைகால்கள், அதற்குள் நடுங்க ஆரம்பித்துவிட்டன. சற்றுநேரத்திற்கெல்லாம், மிகவும் சிரமத்துடன், தன் சினத்தையும், வெறுப்பையும் மறைத்துக் கொண்டு, தன் இடுப்பிலிருந்த ஒரு பத்துரூபாய் நோட்டை எடுத்து, மிகவும் நயத்துடன், அப்பாட்டியையணுகி,

"இந்தா! இதை வைத்துக்கொள். அனாவசியமாய் வம்பு பண்ணாதே." என்று நோட்டை அம்மாதின் கையிலழுத்தவே, அகிலாண்டம்மாள் பணத்தைக் கண்டதும் பசுப்போலானாள்.

பிறகு, காமாக்ஷி கொஞ்சநேரம், சிந்தனையிலாழ்ந்தவண்ணமிருந்தாள். நடுவில் பலதரம் பெருமூச்செறிந்தாள். கடைசியில், "இப்படி எவ்வளவுநாள் இவளை நான் சமாதானப்படுத்தமுடியும்? இது ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் வெடித்தே தீரும். இருக்கட்டும். இவளுக்கு இன்றைக்கே வழிபண்ணுகிறேன்." என்று தீர்மானித்துக்கொண்டு, கோபாலய்யரும் பாலகிருஷ்ணனும் பேசிக்கொண்டிருந்த அறைக்குச் சென்று, பாலகிருஷ்ணனைப் பார்த்து நயத்துடன்,

"அப்பா கிட்டு! ஏதோ அவள் சொன்னாளென்று கோபித்துக்கொண்டு, இப்படிக் கொடுத்த பக்ஷணத்தைச் சாப்பிடாமல் வந்துவிட்டாயே; அவள் ஒரு முழுப்பைத்தியம். ஏதோ மாடுமாதிரி உழைக்கிறாளே என்று கட்டிக்கொண்டு அழுகிறேன். வா! வா! வந்து பக்ஷணத்தைச் சாப்பிடு." என்று வருந்தி அழைக்கப், பாலகிருஷ்ணன்,



"எனக்குக் கோபமென்ன? என்ன இருந்தபோதிலும் வீட்டு வேலைக்காரிகளுக்கு இவ்வளவு இடம் கொடுப்பது உத்தப்பிசகு." என்று தன் மாமன் பக்கம் திரும்பி, "நான் ரயிலுக்குப்போகத் தயாராய், நாலு மணிக்கு வருகிறேன்." என்று உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

இவ்வளவு தூரம் நடந்தும் கோபாலய்யர் எதையும் கவனித்ததாய்த் தோன்றவில்லை.

காமாக்ஷி, "சரிதான்! கிட்டு என்மேல் ஏதோ சந்தேகங்கொண்டிருக்கிறானென்றே நினைக்கிறேன்." என்று தனக்குள் சொல்லிக்கொண்டே மறுபடியும் சமையலறைப் பக்கம் சென்றாள்.

கடைசியில் மணி ஒன்பது ஆயிற்று. கோபாலய்யர், கமலத்தைப்பற்றி நினைத்தவண்ணம் தம் அறையில் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தவர், அவ் வீட்டிற்கெதிரில் ஒரு வண்டி வந்து நின்றதைப்போலிருக்க, தெருப் பக்கமிருந்த ஒரு ஜன்னலை அணுகி வெளியே எட்டிப்பார்த்தார். உண்மையே; ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. அச்சமயம், அதிலிருந்து, காமாக்ஷியின் அத்தைபிள்ளையாகிய சீச்சு இறங்கிக்கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், "ஆஹா! இவன் சென்னையில் அவசியம் கமலத்தைப் பார்த்திருப்பான். என்ன விசேஷம்—" என்று யோசித்துக்கொண்டிருந்தவர் திடுக்கிட்டார்! ஒருதரம் அவருடைய இருதயம் துள்ளிக் குதித்தது. பிறகு, அறையைவிட்டு, வெளியே ஓடினார். அதற்குக் காரணம் சீச்சு அவ் வண்டியைவிட்டிறங்கிய சற்றுநேரத்திற்கெல்லாம், அவருடைய பெண் கமலமும், அதிலிருந்து வெளிக்கிளம்பினாள். அவள் உள்ளே நுழைந்ததும், கோபாலய்யர், அவளை அப்படியே, ஒரு குழந்தையை எடுப்பதுபோல் வாரியெடுத்து, தம் சந்தோஷத்தின் பெருக்கில் வாயைத்திறக்கவும் சக்தியற்றவராய், பிரியத்துடன் பலதரம் அவளுடைய நெற்றியில் முத்தமிட்டார். பிறகு, அவளைத் தம் அறைக்கழைத்துச்

சென்று, தம் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, அவளுடைய முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தார். கமலத்தின் முகம் வெளுத்தும் வாடியுமிருந்தது. ஆனால், கோபாலய்யர், அது, இரவு முழுமையும் ரயிலில் வந்த சிரமத்தினாலிருக்குமென்று நினைத்தார். பிறகு, திரும்பி, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சீச்சுவைப் பார்த்து,

"ஏண்டா சீச்சு! இப்படி நீ இவளை அழைத்துக்கொண்டு வருவாயென்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லையே?" என்றார்.

"நான் அழைத்துவந்ததில் ஒன்றும் தவறில்லையென்றே நம்புகிறேன். நேற்றுமாலை நான் அவளுடைய வீட்டிற்குச் சென்றபொழுது, தன்னையும் அழைத்துக்கொண்டு போகும்படி என்னை வேண்டினாள். இன்னும் அதைப்பற்றி உங்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் சொன்னாள்." என்று விடையளித்துக்கொண்டே, சீச்சு ஒருதரம் கமலத்தை உற்றுநோக்கினான். அவனுடைய கண்கள், "அடியே! உஷார்! நான் சொல்வதற்கு விரோதமாக நீ ஏதேனும் சொல்வாயாகில், உன்னைத் தொலைத்துவிடுவேன்!" என்று பயமுறுத்துவது போலிருந்தன.

கமலம் அவனுடைய முகத்தைக்கண்டதும் நடுநடுங்கினாளென்றே சொல்லவேண்டும். அவனைப் பார்க்கவும் பயந்தவள்போல், தன் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

நிற்க, கோபாலய்யர், சீச்சுவைப் பார்த்து,

"பேஷ்! நல்லகார்யம் செய்தாய். இன்று மாலை கிட்டுவை அனுப்பலாமென்றிருந்தேன்." என்றார்.

கொஞ்சநேரத்திற்கெல்லாம், காமாக்ஷி அங்கு வந்து, கமலத்தைப் பிரியத்துடன், காப்பி சாப்பிடும்பொருட்டு, சமயலறைக்கு அழைக்க, அப் பெண்மணி, தான் மாயவரம் ஸ்டேஷனில் காப்பி வாங்கிச் சாப்பிட்டுவிட்டதாகச் சொல்லவே, காமாக்ஷி சீச்சுவின் பக்கம் திரும்பி ஒருவித கண் ஜாடை செய்தாள். அவன் உடனே, கோபாலய்யரை நோக்கி,



"சரி! நான் போய்வருகிறேன்." என்று உத்தரவு கேட்க, கோபாலய்யர்,

"ஏண்டா! என்ன அவசரம்? இங்கேயே சாப்பிடலாமே." என்றார். ஆனால் சீச்சு, மரியாதையுடன்,

"இல்லை; மன்னிக்கவேண்டும்; ஆத்தில் அம்மா காத்துக்கொண்டிருப்பாள். சாயந்தரம் வருகிறேன்." என்று சொல்லிவிட்டு வெளியே சென்றவன், உடனே தன் வீட்டிற்குப் போகாமல், கொல்லைப் பக்கத்தில் அவனை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்த காமாக்ஷியிடம் சென்றான். காமாக்ஷி, அவனைக்கண்டதும், அவசரத்துடன்,

"ஏண்டா! அவளிப்படி, திடீரென்று வந்த காரணம் என்ன?" என்று வினவ, சீச்சு, கொஞ்சநேரம், விடை அளிக்கவில்லை. பிறகு, வஞ்சகமாய்ச் சிரித்துக்கொண்டே, காமாக்ஷியை ஒருதரம் ஏற இறங்கக் கவனித்தான். பிறகு, "விஷயத்தை இவளிடம் சொல்வது பிசகு." என்று தனக்குள் சொல்லிக்கொண்டு,

"காரணம் ஒன்றும் எனக்குத் தெரியாது. இதைக் கேட்கத்தான் கண்வேலை செய்தாயோ? சரி; நான் போய்விட்டு மத்தியானம் வருகிறேன்." என்றான்.

காமாக்ஷி, ஜாக்கிரதையுடன் நாலாபக்கங்களையும் கவனித்துக்கொண்டே, தாழ்ந்தகுரலில், கவலையொழுக,

"சீச்சு! உன்னிடம் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்." என்றாள்,

சீச்சு, ஆச்சர்யப்பட்டவன் போல, "அதென்ன?" என்று கேட்க, காமாக்ஷி,

"அடே! இந்த அகிலாண்டம்மாள் என்னைச் சந்தியில் இழுத்துவிடுவாள் போலிருக்கிறது; அவள் வர வர மிகவும் பயமுறுத்துகிறாள்." என்றாள்.

"இவ்வளவுதானே? நீ ஒன்றும் கவலைப்படாதே!" என்று தைர்யம் சொல்லிவிட்டு, சீச்சு, போய்விட்டான்.

...நிற்க, கோபாலய்யர், சீச்சு, தம் அறையைவிட்டுப் போனதும், தம் புதல்வியைப் பார்த்து,

"அம்மா கமலம்! நீ ஏன் இப்படித் திடீரென்று உன் படிப்பை நிறுத்திவிட்டாய்?" என்று வினவினார்.

கொஞ்சநேரம் கமலம் வாயைத் திறக்கவில்லை. அவளுடைய ஹிருதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. தன் தந்தையின் கேள்விக்கு என்ன விடை அளிப்பதென்று தெரியாமல் தயங்குபவள்போல் காணப்பட்டாள். பிறகு, தடுமாற்றத்துடன்,

"ஒன்றுமில்லை. எனக்கு உங்களைப் பார்க்கவேண்டும் போலிருந்தது; அவ்வளவுதான்." என்றாள். ஆனால் தான் சொல்வது பொய்யென்பதை அவள் நன்கறிந்தவளாகையால், அதற்காகத் தன்னைத் தானே வெறுத்துக்கொண்டு, தன் தந்தையின் முகத்தைப் பார்க்கவும் வெட்கி, தரையை உற்றுநோக்கியவண்ணமிருந்தாள். பிறகு, தன் வருத்தம் தாங்காமல், விசித்து விசித்து அழலானாள். அச்சமயம், அவளுடைய முகத்தைக் கண்டவர்கள் பரிதாபப்படாமல் இருக்கமுடியாது.

கோபாலய்யர், தம் பெண் கூறிய காரணம் திருப்திகரமாயில்லையென நினைத்து, மறுபடியும்,

"அம்மா! உள்ள விஷயத்தை என்னிடம் சொல்லமாட்டாயா?" என்று வற்புறுத்த, கமலம், அதிகரிக்கும் தடுமாற்றத்துடன்,

"ஒருவிஷயமுமில்லை. அப்பா! இதுவரையில் நான் தாயற்றவள் என்பதை உணரவில்லை. ஆனால், சென்ற ஒரு மாதகாலமாய், நான் எவ்வளவோ, பிரயத்தனப்பட்டும், எனக்கு அதே ஞாபகமாகவே இருக்கிறது. இன்னும், நான் போகக்கூடிய பல இடங்களில், பெண்கள், அவர்களுக்கு வயது இருபத்தைந்துக்கு மேலாயும், அதற்குள் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாய்களாயிருந்த போதிலும், அவர்கள் பிறந்தகம் வருங்கால், தங்களுடைய பெற்றோர்களின் நடுவில் உட்கார்ந்துகொண்டு [illegible]



படுவதைக் காண, நான் மட்டும், இச்சிறுவயதிலேயே, என் தாயை இழந்ததையுமன்றி, உயிருடனிருக்கும் உங்களையும் விட்டுப் பிரிந்திருக்கவேண்டியதையும் நினைக்கவே, என்னால் வருத்தம் தாங்கமுடியவில்லை. அப்பா! நான் இப்படி உங்களுடைய உத்தரவின்றிப் படிப்பை நிறுத்திவிட்டு வந்ததற்காக, என்னைத் தயவுசெய்து மன்னிக்குமாறு கெஞ்சுகிறேன்." என்றாள்.

இதைக்கேட்டதும், கோபாலய்யருடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்க் கொட்ட ஆரம்பித்தது. மறுபடியும், தம் பெண்ணை அணைத்துக்கொண்டு, "என் செல்வமே! நீ வருத்தப்படாதே; நீ படித்து ஆகவேண்டியதொன்றுமில்லை; உனக்குச் சாதாரணமாய்ப் படிப்பில் மிகவும் சிரத்தையுண்டென்பது எனக்குத் தெரியுமாகையால், முதலில் வியப்புற்றேன்; அம்மா! நீ இவ்விதம், உன் தாயை நினைத்து ஏங்குகிறாயென்பதையும், என்னை விட்டுப் பிரிந்திருக்கவேண்டியதை நினைத்து, கஷ்டப்படுகிறாயென்பதையும், நான் அறியேன்; என் உயிர்நிலையே! இனி எக்காரணத்தைக்கொண்டும், உன்னை என்னிடமிருந்து ஒருநிமிஷநேரமும் அனுப்பமாட்டேன்." என்று உறுதியுடன் சொல்லிவிட்டு, மறுபடியும் அவளை முத்தமிட்டுக் கொண்டார்.

ஆனால், கமலத்தின் கண்களில் காணப்பட்ட கலவரப் பார்வையும், அவளுடைய பேச்சின் தடுமாற்றமும், அதிகரித்துக்கொண்டேவந்தன. கடைசியில், அவள்,

"அப்பா! மிகவும் சிரமமாயிருக்கிறது. தலைவலி பொறுக்கமுடியவில்லை. போய்க் கொஞ்சநேரம் படுத்துக் கொள்ளுகிறேன்." என்று சொல்லிவிட்டு, ஓர் அறைக்குச் சென்று படுத்துக்கொண்டாள். ஆனால், சற்றும் மனோநிம்மதியற்று, படுக்கையில் புரண்டவண்ணம், தன்னுள் புலம்ப ஆரம்பித்தாள். "ஐயோ! தெய்வமே! என் கதி என்ன ஆகும்? இந்த ரஹஸ்யம் இப் படுபாவிக்குத் தெரிந்துவிட்டால், நான் என்னென்ன அவமானங்களை அனுப

விக்கவேண்டுமோ தெரியவில்லையே! அந்தோ! தற்கொலை செய்துகொள்ளவும் மனந்துணியவில்லையே! ஹா! என் அருமைத்தோழி! உன் கதியென்னவாயிற்றோ?" என்றும், இன்னும் பலவிதமும் பிரலாபித்தவண்ணம், வர்ணிக்க இயலாத பயத்திற்கும், கவலைக்கும் இரை ஆனாள்.

கோபாலய்யர், தம் புதல்வி தம்மை விட்டுச் சென்றதும், ஒரு வேலைக்காரனை அழைத்துப் பாலகிருஷ்ணனிடம் போய், கமலம் வந்துவிட்டதால், அவன் சென்னைக்குப் போகவேண்டிய அவசியமில்லை என்று, சொல்லிவரும்படி உத்தரவிட்டுவிட்டு, பக்கத்தில் மேஜைமேலிருந்த ஒரு வர்த்தமானப் பத்திரிகையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். அதில் 'அதிசய சம்பவங்கள்' என்ற தலைப்பின் கீழ், கீழ்க்கண்ட ஒரு விஷயம் எழுதப்பட்டிருந்தது:—

"சென்னை,
23—12—27.

நேற்று இவ்வூர், —தெருவில், ஒரு வீட்டில், பிறந்து, 25 தினங்களிருக்கக் கூடிய, ஒரு ஆண் குழந்தை கொல்லப்பட்டுக் கிடந்தது. பிறகு, நடந்த சவப் பரீக்ஷையிலிருந்து, அதை யாரோ வேண்டுமென்று குரல்வளையை முறித்துக் கொன்றிருக்கவேண்டுமென்பது வெளியாயிற்று. போலீஸார் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள்!"

இதை வாசித்ததும் கோபாலய்யர் திடுக்கிட்டார்; பிறகு, "சீச்சீ! ஒருகாலுமிருக்காது!" என்று தம்மைத் தாமே சமாதானப்படுத்திக்கொண்டார்.

பிறகு கால்மணி நேரத்திற்கெல்லாம் அடக்கமாட்டா ஆநந்தத்துடனும், ஆவலுடனும், பாலகிருஷ்ணன் அவ்வறைக்குள் நுழைய, கோபாலய்யர், தம் குழப்பத்தை மறைத்துக்கொண்டு, புன்சிரிப்புடன்,

"என்டா! அவசரம் பொறுக்கமுடியவில்லையோ? போ! போ! மாடியில் படுத்துக்கொண்டிருக்கிறாள்; ஏதோ உடம்பு சரியாயில்லையாம்; வேண்டுமானால், டாக்டரை



அழைத்துவந்து காண்பி." என்று சொல்லிமுடிக்குமுன், பாலகிருஷ்ணன், மாடியை நோக்கி ஓடினான்.

கமலம் தன் அறையில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். அதைக் கண்ட பாலகிருஷ்ணன் அவளை எழுப்புவது பிசகென நினைத்து, வெளியே போக நினைத்தவன், அப்படிச் செய்ய மனமில்லாமல், மறுபடியும் அவளை அணுகி, அவளுடைய அழகிய முகத்தை உற்று நோக்கியவண்ணம் சற்று நேரம் நின்றான். பிறகு, தன்னைத் தானே கட்டுப்படுத்த முடியாதவனாய், மெல்ல அவளுடைய வலது கரத்தைத் தூக்கி முத்தமிட்டுக்கொண்டான். அப் பெண்மணி திடுக்கிட்டு, தன் கண்களைத் திறந்தாள். ஆனால், பக்கத்தில் பாலகிருஷ்ணன் நிற்பதைக் கண்டதும், அவளுடைய முகம் மலர்ந்தது. அச்சமயம், தன் பீதியையும் கவலையையும் அடியுடன் மறந்தாள். புன்சிரிப்புடன் தன் காதலனைப் பக்கத்தில் உட்கார்ந்துகொள்ளும்படி ஜாடை செய்ய, பாலகிருஷ்ணன் அப்படியே செய்தான். தங்களுடைய களிப்பின் மிகுதியால், கொஞ்ச நேரம் இருவரும் பேசச் சக்தியற்றவர்கள்போல் காணப்பட்டார்கள். கடைசியில், பாலகிருஷ்ணன்,

"கமலம்! மாமா உனக்கு ஏதோ உடம்பு சரியாயில்லை என்றாரே? டாக்டரை அழைத்து வரட்டுமா?" என்று கேட்க, கமலம்,

"வேண்டாம்; இரவு முழுமையும் ரயிலில் கூட்டமாய் இருந்ததால் சற்றும் தூங்கவில்லை. சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் சிரமப்பரிகாரம் செய்துகொண்டால், சரியாய்ப் போய்விடும்." என்று விடையளித்தாள்.

பாலகிருஷ்ணன்:—"ஆமாம்! நீ ஏன் படிப்பை நிறுத்திவிட்டாய்?"

கமலத்தின் முகம் மறுபடியும் வெளுத்தது. ஆனால், தன் குழப்பத்தை மறைத்துக்கொண்டு,

"அத்தான்! இனிமேல் எனக்கு வாசிக்க இஷ்டமில்லை." என்றாள்.

பாலகிருஷ்ணன் :—"பேஷ்! வாஸ்தவமான விஷயம்; நீ படித்து எந்தக் கோர்ட்டில் ஜட்ஜு உத்தியோகம் பண்ணப்போகிறாய் என்பது எனக்கும் தெரியாமலிருந்தது. இன்னும், உன்னுடன் ஒருமணி சாவகாசம் கழிக்க, தன் ஆயுளில் பாதியைக் கொடுக்கத் தயாராயிருப்பவர்கள் இங்குப் பலபேர் இருக்கும்பொழுது, நீ இவ்விதம் சென்னையிலிருந்ததில் எனக்குச் சற்றும் இஷ்டமில்லை."

கமலம் :—"அத்தான்! நீங்கள் என்னுடன் ஒருமணி சாவகாசம் காலங்கழிக்கும்பொருட்டு, உங்களுடைய ஆயுளில் பாதியைக் கொடுக்கத் தயாரென்ற ஒரு காரணத்தால் எல்லோரும் அப்படியே இருப்பார்களென்று நினைப்பது பிசகு. என்னை இன்றே உயிருடன் ஜதையில் வைத்துக் கொளுத்தப் பலபேர் தயாராயிருக்கிறார்கள்."

பாலகிருஷ்ணன் :—"கமலம்! அப்படியே உனக்குத் தீங்கிழைக்கச் சிலர் இருக்கும்பக்ஷத்தில், அவர்களிடமிருந்து உன்னைக் காப்பாற்ற நானொருவனிருப்பதை மறந்துவிட்டாயோ?"

கமலம் :—"வாஸ்தவமே! ஆனால், எனக்கு எச்சமயம் தீங்கு நேரிடுமென்பதையும், அப்படித் தீங்கிழைக்கக் கூடியவர்கள் யாரென்பதையும் நீங்கள் அறிந்தாலல்லவோ என்னைக் காப்பாற்றமுடியும்? நீங்கள் சதா என் பக்கத்திலேயே இருப்பது சாத்தியமா?

பாலகிருஷ்ணன் :—"ஆஹா! கமலம்! நீ காதலின் மகிமையை அறியாமல் பேசுகிறாய்; கண்மணி! நான் உன்னைவிட்டு ஆயிரம் மைல் தூரத்திலிருந்தபோதிலும், என் ஆத்மாவும், சக்தியும், உனக்குக் கவசம்போலிருக்குமென்பதைப் பூர்ணமாய் நம்பு. இன்னும், உன் விரோதிகள் யாரென்பதும் எனக்குத் தெரியும். கமலம்! ஆனால், தற்சமயம், உன் முகம் வெளுத்தும் வாடியும் இருப்பதற்குக் காரணம், உன்மீது சிலர் பொறாமை



கொண்டு, உனக்குத் தீங்கிழைக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒன்றுதானே? அன்பே! நான் இதுவரையில், உன் முகத்தில் இப்பேர்ப்பட்ட பயந்த பார்வையையும், உன் பேச்சில் இவ்வித தடுமாற்றத்தையும் கண்டதில்லையே."

கமலம், என்ன விடையளிப்பதென்று தெரியாமல், தயங்கினாள். நல்லவேளையாய் அச்சமயம், காமாக்ஷி அங்கு வந்து, அவளைச் சாப்பிட அழைக்க, தப்பினேனென்று எண்ணியவள்போல், பாலகிருஷ்ணனைப் பிறகு வரும்படி கூறிவிட்டுச் சமையலறைக்குச் சென்றாள்.

அன்று இரவு சுமார் 10மணி இருக்கும். பலத்த மழை பெய்துகொண்டிருந்தது.

அதற்குள், நம் காமாக்ஷி பஹிஷ்டையாய்விட்டாள்.

அச்சமயம், அவ்வீட்டுச் சமையற்காரி, அகிலாண்டம்மாள் கையில் செம்புடன், "தீண்டாதே! தீண்டாதே!" என்று கூவிக்கொண்டே கொல்லைப்பக்கம் சென்றாள். ஆனால், அவளுடைய கூச்சலைக்கேட்காத காமாக்ஷி, திடீரென்று, அவள் சமீபத்தில் வந்துவிடவே,

"அடியம்மா! என்னடி இப்படி கிட்ட வந்துட்டாயே! இத்தனை நாழிக்குமேல் நேக்கு ஆரு தண்ணி கொட்டப்போரா? எழவு! இன்னும் நான் வயத்துக்குக் கொட்டிக்கலயே!" என்று புலம்ப, காமாக்ஷி, வருத்தப்பட்டவள்போல்,

"அகிலாண்டம்! நீ வந்ததை நான் பார்க்கவில்லை. இதற்காகப் பட்டினியாய்ப் படுத்துக்கொண்டுவிடாதே; இதோ கொல்லைப்பக்கத்தில் காவேரியிருக்கிறது; போய் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வா." என்று சொல்ல, அகிலாண்டம்மாள் வயிற்று விஷயத்தில் மிகவும் குறியுள்ளவளாகையால், காமாக்ஷி சொல்வது நியாயமென நினைத்து, வீட்டைவிட்டு வெளியே சென்றாள்.

மறுநாட் காலை 7 மணிக்கு, மணஞ்சேரியிலிருந்து, கனகபுரிக்கு, காவேரியோரமாயுள்ள ஒற்றையடிப் பாதையின் வழியாய் வந்துகொண்டிருந்த சிலர், சமீபத்தில், ஜல மட்டம் வரையில் தாழ்ந்திருந்த ஒரு மூங்கிற்கொத்தில் ஒரு சவம் மாட்டிக்கொண்டிருப்பதைக் காண, உடனே அவ் விஷயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவே, பிறகு நடந்த போலீஸ் விசாரணையில், அது அகிலாண்டம்மாள் என்று வெளியாயிற்று.

---

## அத்தியாயம் 5.

கமலம் தன் தந்தையிடம் வந்து ஒருமாதத்திற்கு மேலாய்விட்டது. ஆனால், பாலகிருஷ்ணன் அவளைப் பார்க்கும்பொருட்டு ஒவ்வொருநாளும் வந்துகொண்டிருந்தபோதிலும், அவள் பலவித காரணங்களைச் சொல்லி, அவனைப் பார்க்காமலும், அப்படியே பார்த்தபோதிலும், ஒரு நிமிஷ நேரங்கூட அவனுடன் பேசாமலும், தட்டுக்கழித்துக் கொண்டுவந்தாள். இதைக் கண்ட பாலகிருஷ்ணனுடைய மனதில் பலவித சந்தேகங்களுதிக்கலாயின. ஒருகால் அவள் வேறு யாரையாவது காதலிக்கிறாளோ என்ற எண்ணம் அவனுக்கு அதிகரித்தது; அது அவன் மனதில் தோன்றியபொழுதெல்லாம், அவன் நரகவேதனைக்குள்ளானான்.

நிற்க, காமாக்ஷியோ, தான் திரும்பும் பக்கங்களிலெல்லாம் சமையற்காரி அகிலாண்டம்மாளின் ஆவேசத்தைக் கண்டவள்போல், சதா கலவரப்பார்வையுடன் காணப்பட்டாள். அந்த ஒருமாத காலத்திற்குள் அவள் முகம் வெளுத்தும் சரீரம் வாடியுமிருந்தன.

நாம் சொல்லும் தினம் பிற்பகல் 3 மணியிருக்கும். காமாக்ஷி ஒரு அறையில் கவலையே ஓர் உருவெடுத்திருப்பதைப்போல் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய நேத்திரங்களில் நீர் ததும்பி நின்றது. "ஐயோ! தெய்வமே! நான் என்ன செய்வேன்? என் கதி யென்னவாகுமோ தெரியவில்லையே. ஆனால் வாஸ்தவத்தில் நான் யாதொரு குற்றத்



தையும் செய்தவளல்லவென்பதை நீயே யறிவாய். ஆஹா! உலகத்தில் தன்னையறியாமல் ஒரு குற்றத்தைச் செய்தவர் அதை மறைக்கும் பொருட்டு, அவர்கள் சுவப்பனத்திலும் காணத்துணியாத பல குற்றங்களைச்செய்ய நேரிடுமென்பது வாஸ்தவமே. நான் நம் அத்தைபிள்ளைதானே, என்று நம்பி இப்பாபியுடன் நெருங்கிப் பழகியதின் பலனாய் இவனுடைய சூழ்ச்சியில் சிக்குண்டு, அது வெளிவாராவண்ணம், எப்பேர்ப்பட்ட காரியங்களையெல்லாம் செய்துவிட்டேன். அந்தோ! அவைகள் எவ்வளவுநாள் வெளிவராமலிருக்கும்? வாஸ்தவமே; நான் என் பர்த்தாவிடம், உள்ளதை ஒப்புக்கொண்டுவிடும்பக்ஷத்தில், உதாரகுணசீலராகிய அவர் என்னைக் கண்டிப்பாய் மன்னித்துவிடுவார்; ஆனால் தற்சமயம் இச்சண்டாளனிடமிருக்கும் ருசுவுக்கு நானென்ன செய்யமுடியும்? அவன் அதை யென்னிடம் கொடுத்துவிடுவானென்ற நம்பிக்கையில், அவனுக்கிதுவரையில் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறேன்! இன்னும் நான் அவனிடம் மாட்டிக்கொண்டிருக்கிறேன் என்ற ஒரு தைரியத்தினால், என் வீட்டில் அவன் எப்பேர்ப்பட்ட காரியங்களையெல்லாம் செய்திருக்கிறான்? எல்லாம் போக, கமலத்தின் நடவடிக்கைகளைக் காண மிகவும் பயமாயிருக்கிறது! அவளிங்குவந்து ஒரு மாதத்திற்குமேலாயும், என்னுடன் சரிவர இன்னும் பேசவில்லை. ஏதோ தன் தந்தையுடன் பேசும்பொழுதெல்லாம் குசுகுசுவென்று பேசுகிறாள். ஒருகால், அவளுக்கு என் விஷயங்களெல்லாம் தெரிந்திருக்குமோ? ஹோ! தெய்வமே! என்னால் இக்கஷ்டம் பொறுக்கமுடியவில்லையே! தற்கொலைசெய்துகொண்டு விடுவோமென்றாலும், இப்பாழும் மனம் இடங்கொடுக்கவில்லையே! ஐயோ! எனக்கு வயது இருபதுக்குமேலாயும், சாதாரணமாய், உலகில், என்போன்ற பெண்கள் அனுபவிக்கும் சுகங்களில் எதையும் கண்டறியேனே! ஹோ! சண்டாளா! என்னை ஏய்த்து, இந்த நிலைமைக்குள்ளாக்கிய நீ என்ன போக்குப் போவாயோ? ஐயோ! பாவம்! அகிலாண்டத்தின் கதியை நினைக்க, இப்பாபி,

என்மீது சற்றும் ஈவு, இரக்கம் காட்டுவானென்று நம்ப மார்க்கமில்லையே!" என்று தனக்குள் புலம்பிக்கொண்டே இருந்தவள் திடுக்கிட்டாள். அதற்குக் காரணம் அச்சமயம் வெளியில் சீச்சுவின் குரல் கேட்டது. மறுநிமிஷம் அவன், அவ்வறைக்குள் அட்டஹாஸத்துடன் நுழைந்து, பக்கத்தில் காணப்பட்ட ஒரு சாய்வு நாற்காலியில் திமிருடன் உட்கார்ந்துகொண்டான். பிறகு, அலக்ஷியமாய்,

"என்ன காமாக்ஷீ! என்ன ஸமாச்சாரம்?" என்று வினவினான்.

காமாக்ஷி:—"சமாச்சாரமென்ன? ஒன்றுமில்லை."

சீச்சு:—"சரி! அந்தக்குட்டி என்ன சொல்லுகிறாள்?"

காமாக்ஷி:—"யார்?"

சீச்சு:—"அதான் கமலம்."

காமாக்ஷி:—"அடாடா! மறந்தேவிட்டேனே! சீச்சு! நீ உள்ள விஷயத்தைச் சொல்லமாட்டாயா?"

சீச்சு:—"என்ன விஷயம்?"

காமாக்ஷி:—"அவளிப்படித் திடீரென்று தன் படிப்பை நிறுத்திவிட்டு, இங்கு வந்ததின் காரணமென்ன?"

சீச்சு—"அது எனக்கெப்படித் தெரியும்?"

காமாக்ஷி:—உனக்கு நன்றாய்த் தெரியும்!"

சீச்சு:—"சரி! தெரியுமென்றே வைத்துக்கொள்ளுவோம். ஆனால் அதை நீ தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமில்லை. வேண்டுமானால், ஒருவிஷயம் சொல்லுகிறேன். அவளுக்கு, நம் இரஹஸ்யம் முழுமையும் தெரியும்."

இதைக்கேட்டதும் காமாக்ஷியின் முகம் மேலும் வெளுத்தது. பிறகு சொல்லொணாக்கவலையுடன்,

"சீச்சு! என்ன சொன்னாய்? அவளுக்கு எல்லாம் தெரியுமா? ஹா! தெய்வமே! என் கதி என்னவாகும்?" என்று தேகங்குலுங்க அழ ஆரம்பித்தாள். ஆனால், அவளுடைய பீதியையும், பரிதாப நிலைமையும், சற்றும் லக்ஷியம் செய்யாமல், சீச்சு கபடமாய்ச் சிரித்துக்கொண்டே,

# அசோகா.

## அல்லது

## அறியாமையால் நேர்ந்த பிழைக்காக ஆருயிரிழந்த அருங்குமரி.

(கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதியது.)

அழகிய நீல நிறமுடைய விரிந்த ஆகாயத்தில் எண்ணற்ற தாரகைகள் நாணத்துடன் நகைத்துக்கொண்டிருந்தன. சந்திரன் தனது தண்ணிய கதிர்களினால் அமுதமயமான பனித்துளிகளைப் பூமியில் வருஷித்துக்கொண்டிருந்தான். பசிய நிறமுடைய பச்சிலைகள் நிறைந்த விருக்ஷங்கள், அமைதியுடனிருந்து நட்சத்திரங்களின் நடனங்களைக் கவனித்துக்கொண்டிருந்தன. அன்பில் மயங்கிய பூங்கொடிகள், செழுமரங்களின் தோள்களை ஆலிங்கனஞ் செய்துகொண்டு ககனத்தில் கனசங்கோசத்துடன் விளங்கிக்கொண்டிருந்து கலாநிதியை நிமிர்ந்தவண்ணம் பார்த்துக்கொண்டிருந்தன. சலித்துக்கொண்டிருக்கிற குளிர்ந்த நதியின் அலைகளின்மீது சந்திரனது காந்திபடிந்து தளதளவென்று மின்னிக்கொண்டிருந்தது. காதுக்கினிமையான நாதவொலியுடன் நதியானது பிரகாசித்துக்கொண்டிருந்தது. பிரவாகம் அசைவின்றி அமைதியாகச் சென்றுகொண்டிருந்ததால் தாராகணங்கள் குதூகலத்துடன் அதனுள் விளையாடிக்கொண்டிருந்தன. மனிதன் எண்ணமும் திருஷ்டியும் ஏதோ ஓரிடத்தில் பந்திக்கப்பட்டிருப்பினும், இத்தகைய இயற்கையமைப்பின் விநோதங்களால் கவரப்பட்டுக் களிப்படையாதிருக்கக் கூடவில்லை

நதியின் கரையருகிலிருந்த உயர்ந்த ஒரு பாறையின்மீது வீற்றிருந்த யௌவன மாதொருத்தி தெளிந்த நீரினுள் காணப்பட்ட நட்சத்திரங்களின் பிரதிபிம்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய கைகளில் பூர்த்திபெறாத புஷ்பமாலையொன்றிருந்தது. பின்னும் பல மலர்கள் அவளருகில் பரவிக்கிடந்தன. நதியினின்றெழுகின்ற இனிய கானத்தின் இடையிடையே அவளும் குயில்போன்ற தனது குரலில், மதுரம் செறிந்த இனிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தாள் இவள் சிறிதுநேரம் பாடுவதிலும், சிறிதுநேரம் பூமாலை தொடுப்பதிலும், சிறிதுநேரம் தாவள்யமாய் விளங்கும் சந்திரனைக் கூர்ந்து கவனிப்பதிலும், சிறிதுநேரம் நட்சத்திரங்களைக் கணக்கிடுவதிலுமாகத் தனது காலத்தைச் செலவிட்டுக்கொண்டிருந்தாள். இவைகள் அனைத்திலும் இவளது கவனம், தனது காதலனது வரவை எதிர்நோக்குவதிலேயே மிகுதியாக இருந்தது. பின்னர் அம்மலர்மாலையைப் பூரணமாகக் கட்டிமுடித்தாள். இங்ஙனம் சிரமப்பட்டுத் தொடுத்து முடித்த அம்மாலையை தனது மிருதுவான அழகிய கரங்களால்

மேலேயெடுத்து அதன் அழகை நோக்கினள். அது நேத்திரானந்தமாய் இருப்பது கண்டு இளநகையரும்பிய அவள் அதனைத் தனது அருகே வைத்துக்கொண்டாள். அன்பனது வருகையைக் காணாது வருந்தியவள் வாடிய மனத்துடன் தான் வீற்றிருந்த பாறையினின்று மேலெழுந்து நின்றுகொண்டு, எதிரே தோன்றும் நடைவழியை நோக்கிக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள். அவளது சுருங்கிய முகத்தைப் பார்த்தபோது அவள் விசாரத்தால் வேதனைப்படுகிறாள் என்று காணப்பட்டது. இதற்குள் வெகு தூரத்தில் குதிரைகளின் காலடி ஓசை கேட்டது. அக்கணமே அவளது அதரங்களில் புன்னகை தவழ்ந்தது. பேரன்பினால் மலர்ந்த தனது திருஷ்டியைச் சந்திரனிடத்தில் செலுத்தி இனிமையாகப் பாடத்தொடங்கினாள்.

வீணையின் நாதத்தைக்கூடத் திரஸ்கரிக்கும் அவளது மதுர கானத்தின் இனியவோசை நதியின் பிரதேசமனைத்தும் வியாபித்தது. ஆச்சரியமடைந்த அமுதகதிரோன், மந்திரத்தினால் மயக்கமடைந்தவனைப்போல் இமைகொட்டாது அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளுடைய கானத்தின் மகிமையை மந்தமாருதம் வருணித்துக்கொண்டிருந்தது. சந்திரனும் தாராகணங்களும் விருக்ஷ சமூகங்களும் நதியும் ஆனந்தமயமான அவளது அமுதகானத்தைக் கேட்டு மூக்கின்மீது சுட்டுவிரலைவைத்து வியந்துகொண்டிருந்தன. அவைகள் அங்ஙனம் வியப்பதைக்கண்டு அவளது கானாவேசம் முன்னிலும் அதிகரித்தது. கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் வழிந்தது. மகிழ்ச்சியினால் அவளது தேகம் மயிர்க்கூச்செறிந்தது. க்ஷணகாலம் அவள் மயக்கமடைந்தவள்போலிருந்தாள்.

இந்நிலையில் குதிரைகளின் காலடி ஓசை வெகு சமீபத்தில் கேட்டது. ஆனந்த பரவசத்தினால் மலர்ந்த கண்களையுடைய அவள் மிருதுவான தனது கைகளை நீட்டித் தன்னருகணைந்த அழகிய வாலிபனை ஆவலால் ஆலிங்கனஞ்செய்துகொண்டு தனது பேரன்பினால் பெருகிய ஆனந்தக்கண்ணீரால் அவனது நெற்றியை நனைத்துவிட்டாள்.

அப்பொழுது அந்நதிக்கரையின் நெருங்கிய மரக்கூட்டங்களினின்றும் நீண்ட வளர்ச்சியும் தேகக்கட்டும் வாய்ந்த மற்றோர் வாலிபன் திடீரென அவர்கள் எதிரே தோன்றினான். காடாலிங்கனப் பிரேமையின் சாகரத்தில் மூழ்கியிருந்த அப்பாலிகையாவது, அவளது மெல்லிய தோளின்மீது சாய்ந்துகொண்டிருந்த வாலிபனாவது தம் எதிரே நின்றுகொண்டிருந்த வாலிபனைப் பார்க்கவேயில்லை. அவன் அந்நிலையிலுள்ள இருவரையும் பார்த்து ஸ்தம்பிதனாயினான். முகம் வெளுத்தது. மிகுதியான கோபாவேசத்தினால் தேகத்தில் நடுக்கமுண்டாயிற்று. தனது மெல்லிய அதரங்களை மென்றதனால் அத



னின்றும் இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. கண்களில் தீப்பொறி எழுந்தது. திடீரெனத் தனதுடைவாளை உறையினின்றும் பாதியுருவித் திரும்பவும் அவ்வாளை அவ்வுறையிலேயே திணித்துவிட்டான். பின்னர், கடினமான தொனியுடன் அவளை நோக்கி, “சபாஷ்! அசோகாதேவி! சபாஷ்! ஆதித்தபுர அரசனுடைய மருமகளாவதற்கு நீ சிறிதும் தகுதியற்றவள்” என்று கூறினான்.

சிரசின்மீது இடிவிழுந்திருப்பினும், அசோகா, அத்துணைப் பெரிய திகிலடைந்திருக்கமாட்டாள். அவள் திடீரெனப் பின்னொதுங்கினள். பயத்தின் மயக்கத்தினால் கண்களைத் திறந்தனள். அந்தோ! எத்தகைய பயங்கரமான நிலைமை! அவளது பிராணபதியும், அரசகுமாரனுமான, ஆனந்தசிம்மன், கொதித்த கோபத்தினால் கொடிய பார்வையுடன் தன்னை நோக்கிக்கொண்டிருப்பதையும், தான் யாவனை ஆனந்தசிம்மன் என்று எண்ணிக் காடாலிங்கனம் செய்தனளோ அவன் ஒரு மகம்மதிய வீரனாக இருப்பதையும் தான் தெளிவாக அறிந்தாள். “அந்தோ! அறியாமையால் நான் பெரிதும் மோசம் போனேன்” என்று உரத்துக்கூவி, பிராணமூர்ச்சை அடைந்தாள்

அவளது தீனநிலையைக்கண்டதும் அம்மகம்மதிய வீரனுக்கு மிகுதியும் கோபமெழுந்தது. ஆனால், அசோகாதேவி பிராண மூர்ச்சை தெளியப் போதிய உபசாரம் செய்வதற்கு அவனுக்குத் தைரியமுண்டாகவில்லை. அங்ஙனம் தைரியம் எழாதது ஆனந்தசிம்மனது விரோதமுண்டாகுமென்ற பயத்தினாலன்று. மற்றியாதெனின், இவ்வபூர்வ நிகழ்ச்சி ஒரு க்ஷணநேரத்தில் நேர்ந்ததால் அவனது மனம் பெரிதும் கலக்கமடைந்து அறிவு சுவாதீனமடைவதற்கு நெடுநேரமானதேயாம். ஆனந்தசிம்மன் ஒன்றும் தோன்றாது சித்திரம்போல் அசைவற்று நின்றுகொண்டிருந்தான். எவள், தனது பூர்ண இன்ப வாழ்க்கைக்கு மிகுதியும் உதவியாயிருக்கக்கூடியவள் என்று எண்ணிக்கொண்டிருந்தானோ, எவள் பேரன்பின் மிகுதியால் தனது ஆசையென்னும் அழகிய பூங்கொடியை வளர்த்து நன்மலர் மலரச்செய்து, நறுமணம் பரப்பக்கூடியவள் எனக்கருதியிருந்தானோ, அத்தகைய அசோகாதேவி,—தன் பிராணப்பிரியை,—இன்று அந்நிய நாயகன், அதிலும் மகம்மதியனின் மார்பகத்தின்மீது தனது ஆனந்தபாஷ்பத்தை வருஷித்ததைப் பார்த்து அவன் எத்தகைய ஆச்சரியத்தை அடைந்தானோ? எத்தகைய உட்பகை கொண்டானோ? எத்தகைய இன்னலை எய்தினானோ? அவன் மனது அப்போது எந்நிலைமையிலிருந்ததோ? நாம் அந்நிலையை வருணித்துக் கூறும் ஆற்றல் உடையோம் அல்லோம்.

இச்சம்பவம் நிகழ்ந்தவிடத்திற்குச் சிறிது தூரத்தில் ஒரு பெரிய விருட்சத்தினது நிழலடியில் நின்றுகொண்டிருந்த கருநிறமுள்ள காவ

லாட்கள் விஷயமுணர்ந்து அங்கே வந்தார்கள். தன் சேவகர்கள் ஆங்கு வந்தவுடனே அந்த யவன வீரனுக்குத் தைரியமுண்டாயிற்று. ஆனால், ஆனந்தசிம்மன் முகத்தில்மட்டும் எத்தகைய மாறுதலும் உண்டாகவில்லை. அவன் நின்ற நிலையிலிருந்தே அவர்களை கருத்தூன்றிக் கவனித்துக்கொண்டிருந்தான்.

தட்சணமே ஆனந்தசிம்மனது பேரொளி பொருந்திய நீண்ட உடைவாள் சந்திரனது பிரகாசத்திற்கு எதிர் மின்னிப்பிரகாசித்தது. அதுகண்ட அவர்களனைவரும் தத்தமது உடைவாளை உருவினார்கள். யவன வாலிபன் சட்டெனத் தனது குதிரையின்மீது ஆரோகணித்தான். ஒருபக்கம் வில், அம்பு, கத்தி, கேடயம், வாகனம் முதலியவைகள் கூடிய பகைவர்களுக்கும், மற்றொரு பக்கம் வாளேந்திய கையுடன் நிலத்தின்மீது தனியே நின்றுள்ள வீரனுக்கும் கொடிய யுத்தம் நிகழத் தொடங்கியது.

தங்களுடன் போர்புரிகின்றவன் தனியனாகவே இருப்பதனால் தங்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும் நேராதென்றும், சத்துருவை எளிதாக வென்றுவிடலாமென்றும் அந்த யவனர்கள் எண்ணினார்கள். ஆனால், தனது இன்ப வாழ்வின் ஆசையனைத்தையும் அவலமாக்கிய பகைவன், தன்னெதிரிலேயே இருப்பதைக் கண்ட ஆனந்தசிம்மன், கோபாவேசத்தால் குதித்தெழுந்து தனது ஆருயிரை ஓர் பொருட்படுத்தாமல் ஆரம்பத்திலேயே மிக்க மூர்க்கமாய் அவர்களை எதிர்த்தனன். நீண்டநேரம் போர்புரிந்தும் யாரும் பின்னிட்டார்களில்லை. பகைவர் எழுவருடன் தான் ஒருவனாகவே நின்று பொருதலினால் தனது பலம் சிறிது குறைந்திருப்பது ஆனந்தசிம்மனுக்குத் தோன்றியது. ஆனால் அதனைப் பொருட்படுத்தாது பிராணனை ஒரு துரும்பென மதித்து க்ஷத்திரியர்க்குரிய வீரங்குன்றாமல் உறுதியுடனும் பகைவர்மீது முன்னேறிச் சென்றான். இங்ஙனம் முன்னேறிச் சென்ற ஆனந்தசிம்மன், ஓர் பாய்ச்சலில் தனது சமீபத்தில் நின்றுகொண்டிருந்த குதிரை வீரனைத் தாக்கி அவனை அக்குதிரையுடன் கீழேவீழ்த்தினன். உடனே வேறொருவன் மீது பாய அவனும் கீழே விழுந்தான். அக்கணமே ஆனந்தசிம்மன் எதிரே நின்ற அச்வத்தின்மீது ஆரோகணித்தான். அவனது பலம் இப்பொழுது மும்மடங்கு பெருகிற்று. ஆவேசங் குறையாமல் எஞ்சியவர்கள்மீதும் மூர்க்கமாய்ப் பாய்ந்து தாக்கினன். ஆனந்தசிம்மனது நீண்டவாள் அதிவேகமாகச் சுழன்றது. வாளுடன் வாள் தாக்குவதனால் தீப்பொறி பறந்தன. தமது எதிரி அசாமான்யனென்றும், அவனெதிரில் தம் திறமைகள் யாவும் பயன்படாவென்றும், யவன வீரர்களுக்கு அப்பொழுதுதான் பட்டது. கடைசிமுறையாக யாவரும் ஒன்று கூடித் தங்கள் பகைவனை



எதிர்ப்பதென்று நிச்சயித்து அவ்வீரர்கள் ஒருமுகமாய்த் தங்களது வாட்களை உருவினார்கள். அவ்வாட்கள் தன்மீது தாக்குவதற்கு முன்னரே ஆனந்தசிம்மன் ஒருவனது சிரத்தை வெட்டி வீழ்த்தினன். மற்றொருவன் கையைத் துணித்தனன். இவைகளைக் கண்ட தலைமை வீரன், குரோதாவேசனாய் ஆனந்தசிம்மன்மீது பாய்ந்தான். ஆனந்தசிம்மன் அத்தகைய மூர்க்கனாயிருக்கவில்லை. அவன் தன் பலமனைத்தையும் ஒருங்கு சேர்த்துக் கூரிய தனது நீண்டவாளை லாகவமாகவும், சமர்த்தாகவும் யவனவீரனது உடைவாள் அவனது கையினின்று பிரிந்துபோகும்படி உபயோகித்தனன். ஆனந்தசிம்மன் எண்ணியபடியே அவ் யவனவீரனது உடைவாள் கையினின்றும் மேலே எழுந்து ஆகாசத்திலே கிறுகிறு எனச் சுழன்று நதியில் வீழ்ந்து ஆழ்ந்தது. யவன வீரன் ஆயுதமிழந்து வெறுங்கையனாய் ஆனந்தசிம்மனது எதிரே நாணத்தால் தலைகுனிந்து நின்றான்.

"போ! நீ இனி என்னெதிரில் நில்லாதே; போ! ஆயுதமில்லாத பகைவனை ராஜபுத்திரர்கள் எப்பொழுதும் கொல்லத்துணியார்கள்." என்று ஆனந்தசிம்மன் கடும் தொனியுடன் கூறினான்.

இதற்குள் அழுகைக்குரல் கேட்டது. பாவம்; அசோகாதேவி பிராணமூர்ச்சை அடைந்தபொழுது அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்ய யாரும் உதவாததனால் மந்தமாருதமே அவள்பாலிரங்கி அவளுடைய பிராணமூர்ச்சை தெளிவதற்குப் பேருதவிபுரிந்தது. அதனால் அவள் தெளிவடைந்து அப்பொழுதுதான் எழுந்துட்கார்ந்தாள். "சித்தப்பிரமையினால் நான் எத்தகைய பயங்கரமான காரியத்தைச் செய்துவிட்டேன். பாபுருஷனோடு ஆலிங்கனம்! ஹா! பெருந்தவறிழைத்தேன்! 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம்' என்னும் இலக்கியத்திற்கு நானே போதிய சான்று. என் ஆருயிரனைய ஆனந்தசிம்மன்மீது யாதோர் குற்றமுமில்லை. பெருங்குற்றவாளி நானே. என் அறியாமையும், அவசரமுமே இதற்கு முக்கிய காரணம். அந்தோ! எனது பிராணபதியின் மனதில் தோன்றிய பயங்கரமான சந்தேகம் எப்பொழுதேனும் நீங்குமா? அவர் மீண்டும் எப்பொழுதும்போலவே என்னிடம் பேரன்புகொள்வரோ? என்னைத் தம்மருகே சேர அழைப்பரோ?" என்று மிகுதியும் அவள் மனோவேதனை கொண்டாள். பிரபஞ்சம் அனைத்தும் அவள் கண்களுக்குப் பாழாய், பயனற்றதாய், ஓரே பேரிருட்டாய்த் தோன்றியது. அவள் விம்மிவிம்மி அழத் தொடங்கினள்.

ஆனந்தசிம்மன் குதிரையினின்றும் கீழே குதித்து, அவளருகிற் சென்று, "ராஜபுத்திர கன்னிகையே!" என்று விளித்தனன்.

அசோகாதேவி திடுக்கிட்டவளாய்க் கண்களைத் திறந்தனள்; எதிரே தன் பிராணநாயகன் நின்றிருந்தான். அவனது அருகில் யவன

வீரனது துணைவர்கள் வெட்டுண்டு பிரேதங்களாக வீழ்ந்துகிடந்தார்கள். ரத்ததாரைகள் ஆற்றிடைத்திட்டில் சிவந்த நிறத்துடன் பரவி இருந்தன. யவனவீரன் வாடிய முகத்துடன் நின்றுகொண்டிருந்தான். தன் பிராணப்பிரியனது ஒப்பற்ற வீரபராக்கிரமத்திற்கு அசோகா அளவற்ற ஆனந்தமடைந்தவளாய்த் தனது குற்றத்தைமறந்து தனது காதலனை ஆலிங்கனஞ் செய்துகொள்வதற்குக் கைகளை நீட்டி முன்னேறிவந்தாள். ஆனந்தசிம்மன் கடுமையுடன் தன் கைகளினால் அவளைப் பின்னே தள்ளி, "சீ! துஷ்டையான ராஜபுத்திரப் பெண்ணே! அப்படியே நின்றுகொண்டு, நான் கூறும் சொற்களைக் கவனமாகக் கேள்." என்றனன்.

அசோகா, தீனமுள்ள முகத்தை உடையவளாய் உன்மத்த ரீதியில் தன் நாயகனைப் பார்க்கலானாள். மிகுதியான கோபம் நிறைந்த அவனது முகத்தைப் பார்ப்பதற்கு அவளுக்கு மிகவும் பயங்கரமாயிருந்தது. ஆனந்தசிம்மன் கடுமையான மொழியில் அடியில் வருமாறு கூறத் தொடங்கினான்:—

"ஆதித்தபுர அரசனாகிய என் தந்தை, உன் தந்தையை ராஜ்யத்தினின்றும் வெளியே துரத்தி 'அவனுடன் சிநேகமாக இருப்பவர்களுக்கும், புதிதாகச் சிநேகம் செய்பவர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்படும்' என்று ஆணையிட்டான். ஆனால் நான் என் தந்தையினது உத்தரவை ஒரு சிறிதும் லட்சியம் செய்யாமல், உனக்காக-இழிந்த பெண்ணான உனக்காக—இங்கே வந்தேன். அதுமட்டுமல்ல; எத்துணையோ கஷ்டப்பட்டும், எனது சக்திகளனைத்தும் உபயோகித்தும் உன் தந்தையைத் திரும்பவும் ராஜ்யத்தில் வைப்பதற்கு நான் என் தந்தையைக்கொண்டு ஆக்ஞாபத்திரம் வெளியிடச் செய்தேன். இங்ஙனம் உன்பொருட்டுச் செய்த நன்மைச் செயலை உனக்கு அறிவிப்பதற்கு மிகுதியான ஆசையுடையவனாய், ஆனந்தத்தின் ஆவேசத்தினால் வெகுதூரத்தைப் பொருட்படுத்தாமலும், சிரமத்தைப் பாராமலும் இங்கே வந்தேன். எப்பொழுதும் வருவதுபோல் உன்னிடம் வாராமல் முதலில் உனது மாளிகைக்குச் சென்று அச்சந்தோஷச் செய்தியை யாவருக்கும் தெரிவித்துப் பின்னரே இங்குவந்தேன். நான் இங்கு வருவதற்குமுன், இன்று உன்னுடன் எவ்விதமாக நடந்துகொள்வது? எவ்விதம் சம்பாஷிப்பது? என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். எனது எண்ணம் அவலமாயிற்று. ஹா! தெய்வமே! ஏன் எனக்கு இன்னும் அந்த நினைவு? அதனை நினைத்த உடனே மனதில் சகிக்கமுடியாத வேதனையைத் தருகின்றது. தலை கிறுகிறுவெனச் சுழலுகிறது. இனி உன் இஷ்டப்படி செல்லலாம்! இங்கு நின்று அழுதுகொண்டிராதே! தெய்வம் உன்னைக் காப்பாற்றட்டும்."



அசோகா அச்சொற்களைக் கேட்டதும், அவள் கால்கள் நிலைகொள்ளாமல் தளர்ந்தன; வெயிலால் உலர்ந்த பசுங்கொடிபோல் உடல் வாடியது; நெஞ்சம் நெக்குருகியது; அவளது அழகிய கண்களினின்றும் தாரைதாரையாகக் கண்ணீர் பெருகி வடிந்துகொண்டிருந்தது; வாயினின்றும் ஒரு வார்த்தைகூட அவளால் வசனிக்கக்கூடவில்லை. ஆனந்தசிம்மன் அங்ஙனம் சொல்லித் திரும்பியவுடனே, அசோகா மிகவும் மெதுவாக "நாதா! நான் உண்மையாகவே நிரபராதி; வேண்டுமானால் தங்களுக்காகத் தொடுத்த இப் புஷ்பஹாரத்தையேனும் கேட்டு உண்மை அறியுங்கள்" என்றாள்.

போரில் தான் தோல்வியுற்றிருந்தும், ஆனந்தசிம்மன் தன்மீது மிகவும் இரங்கித் தன்னைக் கொல்லாமல் பிராணதானம் செய்ததற்கு யவனவீரன் ஆச்சரியமடைந்தவனாக இருந்தான். ஆனந்தசிம்மன் குரூரதிருஷ்டியுடன் கொடுமொழிகூறி அசோகாதேவியைத் திரஸ்கரித்தபோது அவனது பயங்கரமுகத்தைப் பார்த்து யாதுங்கூறத்தோன்றாமல் மௌனமாய் நின்றிருந்தான். அவனது நெஞ்சம் வைரப்பாறைபோன்று கடோரமாகவும் மெல்லிய மலர்போன்று மிருதுவாகவும் இருந்தது. அவன் தனது மனதை ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு ஆனந்தசிம்மனைப் பார்த்து தழுதழுத்த மொழியில் சில கூறத்தொடங்கினான். அது:—"இளவரசனே! பாவம் இவள் உண்மையாகவே குற்றமில்லாதவள். குற்றமெல்லாம் என்னுடையவை; சிறிது நாட்களுக்கு முன்னர் நான் அசோகாவைக் கண்டு மோகங்கொண்டேன்; கோபங்கொள்ளாதீர்கள்! நான் இவளது சம்பந்தத்தைப் பெறும்பொருட்டுப் படாதபாடெல்லாம் பட்டேன்; இவள் தங்கள்மீது காதல் கொண்டிருப்பதையும் அறிந்தேன்; மோகவெறிகொண்டவன் நியாய வழியில் செல்வனோ? பின்னர் இவள் தங்களுக்காக ஒவ்வோர் இரவிலும் இங்குவருவதாக உணர்ந்தேன்; உணர்ந்த நான் இவளது சம்பந்தத்தை எளிதாகப் பெறுவதற்குத் தனிமையான இவ்விடம் தகுதியானதென்று தீர்மானித்தேன்; அதன்படி நான் இன்று எனது துணைவர்களுடன் இங்கு வெகுமெதுவாக வரும்போது இவள் தங்களுடைய பெயரையே சொல்லிக்கொண்டும், ஸ்மரணை செய்துகொண்டும், தங்கள்மீதுள்ள பிரேமை என்னும் ஆனந்தரஸத்தைப் பருகிக்கொண்டும் தங்கள் வரவையே நோக்கிக்கொண்டிருந்தாள்; ஆனதால், நான் திடீரென இவள் எதிரில் தோன்றியதும் தங்கள் நினைவின் துடிப்பினால் என்னைத் தாங்களென்றே கருதிக் காடாலிங்கனம் செய்துகொண்டாள்; மெய்யாகவே இவள் இதற்குமுன் என்னை ஒருமுறையேனும் பார்த்தறியாள். அவள் என்னை அறியாமல் தழுவிய ஆலிங்கன சுகத்திற்கு உட்பட்டது பெரியகுற்றமே; அப்பெருங் குற்றத்திற்காக என்னை எவ்விதமாகவும் தண்டிக்கத் தங்களுக்கு உரிமையுண்டு; நிரபராதியா

கிய இவள்மீது தாங்கள் கோபங்கொள்ளாதீர்கள்; இவள் உண்மையாகவே குற்றவாளியல்ல என்பதை மீண்டும் ஆண்டவனறிய மும்முறையும் உறுதிகூறுகின்றேன்; இவளை மன்னிக்கின்றேன் என்று கூறுங்கள்; நான் அப்பால் செல்லுகின்றேன்." என்பது.

ஆனந்தசிம்மனது இருதயத்தில் சிறிது கலக்கமுண்டாயிற்று. அசோகாவின்மீது அவனுக்கு அபரிமிதமான ஆசையிருந்ததனால் அவளைப்பற்றிக் கூறியவற்றைப் பொறுமையுடனிருந்து கேட்டுக்கொண்டிருந்தனன். உண்மை அறிந்த அந்நிமிஷமே அவள்மீது தான் கொண்ட சந்தேகத்தை நீக்கிவிட்டான். ஆயின், தான் க்ஷத்திரிய வீரனாதலால், அவ் வாலிபயவனனை, பிறன் மனைவியென்று நன்றாக அறிந்திருந்தும், அவன் அவளை வேண்டுமென்று வஞ்சித்த குற்றத்திற்காக அவனது சிரம் கீழேவிழுந்து புரளும்படி தனது உடைவாளால் வெட்டி வீழ்த்தினன்.

பின்னர் அவ்விடத்தினின்றும் நீங்கி அசோகாவை அடுத்தான். அப்பொழுது அவள் தான் முன்னர் வீற்றிருந்த பாறையின்மீது அமர்ந்து பாடிக்கொண்டும், தான் மிகவும் சிரமப்பட்டுத் தொடுத்த அழகிய மலர்மாலையைக் கலைத்தும் அதனின்றும் ஒவ்வொரு மலராக எடுத்து நதியின் பிரவாகத்தில் எறிந்தும், அங்ஙனம் பிரவாகத்தில் எறிந்தமலர் நீரில் மிதந்து செல்வதையும் பார்த்து நகைத்துக்கொண்டுமிருந்தாள். ஆனந்தசிம்மன் தன்னருகே வந்து நின்றிருப்பதையும் அவள் கவனியாமல் பைத்தியம்கொண்டவளைப்போல் காணப்பட்டாள். அவளது அத்தகைய செய்கையைக் கண்டு ஆனந்தசிம்மன் ஆச்சரியமடைந்தான்.

அங்ஙனம் ஆச்சரியமடைந்த அவன், அசோகாதேவியை நோக்கி, அசோகா! நீ யாது செய்துகொண்டிருக்கின்றனை? உனக்கு வேண்டியது யாது? என்று வினவினன்.

அசோகா :—இதோ! இந்நீரில் மிதந்து செல்லுகின்ற மலர்களைப்போல் நானும் இந்நீரில் தனியாக மிதந்து செல்லவேண்டுமென்பது எனது விருப்பமாயிருக்கிறது. தாங்கள் எனக்கு உதவிசெய்ய வேண்டுமென்றாள்.

ஆனந்தசிம்மன் :—அவள் கூறிய சொற்களைக் கேட்டுத் திடுக்கிட்டான். அவளை மிகவும் நெருங்கி, அசோகா! வா! இனி நாம் நமது வீட்டுக்குப் போவோம் என்றழைத்தனன்.

அசோகா:—"நான் இப்பொழுது வரமாட்டேன். வேண்டுமானால் தாங்கள் போகலாம். இங்கேயே இருக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பமாயிருக்கிறது. அதோ! அந்தப் பிரவாகத்தில் நான்

நீந்தவேண்டும். தாங்களும் என்னோடு நீந்தவருகிறீர்களா? இல்லை. நான் தனியாகவே நீந்துகின்றேன். எனக்கு யாதும் பயமில்லை." என்று கூறி நதியின் நீரையே கவனித்துக்கொண்டிருந்தாள்.

அசம்பந்தமான அவளுடைய அத்தகைய வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தசிம்மன் மேலும் திடுக்கிட்டு உள்ளமுடைந்தான். பயப்பிராந்தி உடையவனாய் "அசோகா! இனி எழுந்திரு; வெகுநாழிகை ஆயிற்று. தந்தையார் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்" என்றான்.

அசோகா, சமீபத்திலுள்ள ஓர் இடத்தைக் குறிப்பிட்டு "அதோ! அங்கு மலர்ந்து காண்கின்ற மணமிகு மலர்கள் எனக்கு வேண்டும். தாங்கள் சென்று அவைகளை முதலில் பறித்துக்கொண்டுவாருங்கள். நான் மலர்மாலை தொடுக்கிறேன். பின்னர் வீட்டுக்குச் செல்வோம்" என்றாள்.

அவள் ஒருபோதும் இன்று செய்ததுபோல் பிடிவாதம் செய்ததேயில்லை. அவள் கூறியது சூதுமொழியென்றுணராது மெய்யே என்று நம்பிய ஆனந்தசிம்மன் அவள் குறியிடத்தை அடைந்து மலர்களைப் பறித்துக்கொண்டே அசோகாவையும் கவனித்துக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் அவள் எழுந்து நின்று திடீரென நதியின் பிரவாகத்தில் தாவிக் குதித்தாள். முதலில் ஆழம் சிறிதாகவே இருந்தது. அவள் நீரிலேயே முன்னேறி நடந்து செல்வதைக் கண்ட ஆனந்தசிம்மன் பயத்துடன் "அசோகா! அசோகா! நீரில் செல்லாதே. திரும்பு! திரும்பு!! பின்னாலே திரும்பு!!!" என்று சத்தமிட்டுக் கொண்டே விரைந்தோடிவந்தான்.

அசோகாவின் கண்கள் அப்பொழுது தேஜோமயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவள் தீர்க்க சுவரத்துடன், "வாராதீர்! வாராதீர்!! என் முன்னால் வாராதீர்!!! எனக்கு அம் மலர்கள் வேண்டாம். எனக்கு இப் பிரவாகத்தில் தெரிகின்ற நக்ஷத்திரங்கள் தான் வேண்டும். அவைகளை மாலையாகத் தொடுத்து தங்களது கழுத்தில் போடுகிறேன்" என்றாள்.

ஆனந்தசிம்மன் நடுங்கிய மனதுடன் "அ[illegible] அசோகா!! அந்த நக்ஷத்திரமாலை எனக்கு வேண்டா[illegible] எனக்கு அ[illegible] திரமாலை!" என்று உரத்துக் கூறி[illegible]

அப்பொழுது அசோகாவி[illegible] மெல்லிய அதரத்தின்மீது அழகி[illegible] புன்னகை தவழ்ந்தது. அவள் "நான் நக்ஷத்திரமா? அப்படியானால் நான் இப்பொழுதே நக்ஷத்திரமாய், இதோ! ஆங்கு—ஆங்கு அதாவது ஆகாயத்திற்குச் சென்று வீற்றிருக்கிறேன். தாங்களும் என்னுடன்

கூடவே வருகின்றீர்களா? நாமிருவரும் எவ்வளவோ சந்தோஷமாகச் சம்பாஷித்துக்கொண்டிருப்போம்" என்றாள்.

பூர்ணகாந்தியுடன் பிரகாசிக்கின்ற முகத்துடன் நீரிலுள்ள அசோகாவின் நிலையையும், இன்னது செய்வதெனத் தோன்றாது திக்பிரமை கொண்டவனைப்போல் அவளது சந்திரபிம்பம் போன்ற திருமுகத்தையே பார்த்துக்கொண்டிருக்கும் ஆனந்தசிம்மனுடைய நிஜஸ்வரூப நிலையையும் நிபுணர்களான சித்திரக்காரர் எவர்களாலும் சித்தரிக்க முடியாதென்பதே நமது உறுதியான அபிப்பிராயம். தேர்ந்த தமது திறமையால் ஒருகால் சித்திரிப்பினும் அவர்களது அத்யாச்சரிய நிலையை உள்ளபடியே அதில் அமைத்திருப்பதென்பது கேலிக்கூற்றாகும். சிறிது நேரத்திற்குள் அசோகா அப் பிரவாகத்தில் மறைந்தாள்.

பாவம்! ஆனந்தசிம்மன் சித்தப்பிரமை அடைந்தவனைப்போல் நின்றிருந்தான். திடீரென நீரில் ஓர் அரவமுண்டாயிற்று. தனது ஆருயிர்க்காதலி பிரவாகத்தில் சடிதியில் மறைந்துபோனதைத் தேடுவதன்பொருட்டு ஆனந்தசிம்மன் பிரவாகத்தில் குதித்ததே நீரில் தோன்றிய அரவத்திற்குக் காரணம். அவன் அந் நீரிலுள்ள பலவிடத்திலும் தேடியும் அவள் காணப்படவில்லை. ஒருமுறை ஆனந்தசிம்மன் பிரவாகத்தினின்றும் மேலே மிதந்தனன். நான்கு திசையிலும் தனது திறந்த விழிகளினால் நன்கு சுற்றிப்பார்த்தான். மீண்டும் நீரில் மூழ்கினான். பின்னர் அவன் வெளியில் வரவே இல்லை.

முடிந்தது நமது கதை! நதிக்கரையில் ஆரம்பித்து நதிக்கரையிலேயே முடிந்தது.

**"காதலின் இயலை ஓதுதல் அரிதே."**

188768
சென்னை-600

# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0.

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ்மீ கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் நமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்குஅணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமானகாலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ [illegible]1.

மறுபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

**பாலவித்யா ஆபீஸ்,**

**நெ 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.**

பங்குனி௴ 1௳ வெளியாகும்

பிரமோத வருஷத்திய

"ஸ்ரீவித்யா"

# ஆபீஸ் காலண்டர்.

சித்திரை௴ 1௳யிலிருந்து பங்குனி௴ முடிய ஒவ்வொரு தேதிக்கும் கிழிக்கும் பக்கங்களாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் தேதியுடன் அதற்குச்சரியான இங்கிலீஷ் தேதிகளும் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ளது.

தென்னிந்தியாவில் தமிழ் உலகத்தோர் எல்லோருக்கும் தமிழ், இங்கிலீஷ் இரண்டு தேதிகளும் சேர்ந்து இருப்பதால் மிகவும் உபயோகமுள்ளது. மற்றபடி திதிவார நக்ஷத்திரங்களும், எல்லா விசேஷங்களும் அடங்கியுள்ளது.

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.
வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

ஸ்வல்ப காப்பிகளே தயாராகும். தேவைக்கும், மாதிரி (இனும்) காப்பிக்கும், விலை விபரத்திற்கும் எழுதவும்.

பப்ளிஷர்ஸ் :—ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம், (தென் இந்தியா)

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.